# திருமணம் என்பது

(சிறு குறிப்பு)

**ரமணன்**

## சமர்ப்பணம்

- எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும், திருமணம் என்பதை அறம் விதித்த கட்டளையாக ஏற்று, 65 ஆண்டுகளுக்கும் மேலாகச் சேர்ந்து வாழ்ந்து தினமும் விருந்தோம்பும் என் பெற்றோர் போன்றவர்களுக்கும், என் சகோதரிகளுக்கும்
- சனாதன தர்மத்தில் முழு நம்பிக்கையும், அதன் சந்ததியினரின் சீரழிவைத் தயங்காமல் சாடும் பாரதியாரைப் போன்ற சமூக மருத்துவர்களுக்கும்
- அன்றும், இன்றும், என்றும் வாழ்ந்து நம்மை வாழவைக்கும் பெண்மைக்கும்
- எனக்குத் தோள்கொடுக்கும் தோழியாய், சற்றும் நிலைபிறழ்ந்தால் விமர்சிக்கும் நண்பனாய், இணைபிரியாக் காதலியாய், தக்க ஆலோசனை வழங்கும் மந்திரியாய், என்னை மகவாய்ப் பேணும் தாயாய், 28 ஆண்டுகளாக எனக்கு ஒளிவழங்கி நிழலாய்த் தொடர்ந்துவரும் என் அன்பு மனைவிக்கும்
- மருமகள்களாகத் தென்பட்டு சொந்த மகள்களாக எங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட செல்வி பிரியா செல்வி தீப்திக்கும்
- அவர்களை மனைவியராய்ப் பெறும் பேறுபெற்ற, பெருமைப்படத்தக்க என் இரட்டை மகன்கள் செல்வன் ஆனந்த், செல்வன் விக்ரத்துக்கும்
- கண்திறந்தால் குடிமகனின் கடமை; உள்ளாழ்ந்தால் கடவுள் என்று எனக்கு உணர்த்தி வாழ்வின் பயனை எனக்கு வழங்கி மகிழும் என்னுயிரில் உறையும் ஒளியாம் என் குருநாதர் சற்குரு ஸ்ரீ சிவானந்த மூர்த்தி அவர்களின் கமலத் திருவடிக்கும்

இந்தச் சிறுகுறிப்பைச் சின்ன மலராகச் சமர்ப்பிக்கிறேன்.

## 1. வாழ்க்கை என்பது….

### (அ) உயிரின் ஆட்சி:

*உயிர்மய மான துலகம்; உயிரைப்*
*பயிர்போல் வளர்த்தால் பரம்*

உலகெலாம் உயிரே ததும்பிக் கொண்டிருக்கிறது. வீசும் காற்றில் உயிரின் ஸ்வாசம். விரிந்த கடலில் உயிரின் ஓசை. உயர்ந்த மலைகள் உயிரின் பெருமை. பரந்த வெளிகள் உயிரின் கர்வம். பூவில் அடக்கமாய், பொழிவில் ஆர்ப்பரிப்பாய், தீயில் ஆவேசமாய், திரியில் தெய்வதமாய், புழுவில் துல்லியமாய், புனிதரில் பூரணமாய், மனிதரில் பகிரங்கமாய், உயிர்தான் உலகெங்கும், அதற்கப்பாலும் கூடக் காணக் கிடைக்கிறது. வடிவங்களையும், உருவங்களையும் அசைவிப்பது உயிர். அதற்கும் மேலாய், அவை உயிரின் வெளிப்பாடோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது. சலனமற்ற கல்லிலும் உயிர்ச்சித்திரம் கவனத்தை இழுக்கிறது. ஆளற்று நெஞ்சில் அரும்பும் காதலிலும், உயிரே ஆளைக் கட்டிப் போடுகிறது. வார்த்தைகளின் உயிரை, மௌனத்தின் உயிர் வாகை சூடித்தான் இருக்கிறது. இசையோ, உயிரின் மகுடமாய்த் துவங்கி, இதயத்தை இடைவிடாமல் கொள்ளையடிக்கிறது.

வண்ணத்துப் பூச்சிகள் விரிப்பது சிறகுகளையல்ல; உயிரையே! சேவல், கூரையில் நின்று உயிரைக் கொக்கரிக்கிறது. அதிகாலையில் புல்லின் முனை, உயிர்முத்தத்தால் பளபளக்கிறது. நாயின் குரைப்பிலும், நால்வரின் பண்ணிலும், தாயின் பிரசவ முனகலிலும், சேயின் மழலையிலும், ஊமையின் கனவிலும், உள்ளாழ்ந்த உறக்கத்திலும், உதிக்கத் துடிக்கும் கவிதையிலும் உயிரின் ஆட்சியே ஓங்க விளங்குகின்றது.

எனவேதான் நாம் ‘உயிரினும் இனிய’ ‘உயிரினும் மேலான’ ‘உயிர்க்குயிரான’ ‘உயிர்மேல் ஆணை’ என்பன போன்ற உணர்ச்சி வெளிப்பாடுகளுக்கு ஆளாகின்றோம். இதனாலேயே, உலக வாழ்க்கையை உயிர் வாழ்க்கை என்கிறார்கள். ஆம், வளர்வதும், தேய்வதும் உடம்பென்றாலும், வாழ்வது உயிர்தானே! பிறப்புக்கு முன் பெயரில்லை. இறப்புக்குப் பின், முகவரியில்லை. இவற்றுக்கு இடையிலே, இன்பம்-துன்பம், இருள்-விடிவு, இழப்பு-ஈடு, கருத்து-மோதல், தத்துவம், சித்தாந்தம் என்றெல்லாம், நான் என்ற ஒற்றை எண்ணத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, எண்ணற்ற அனுபவங்களின் தொகுப்பான மனித வாழ்க்கை, உயிரின் துணைக்கொண்டே நடக்கிறது.

உயிரே வாழ்கிறது. வாழ்க்கை உயிரானது.

உயிரிலே, ஓர் ஒழுங்கு இருக்கிறது. கோள்களின் பிசகாத சுழற்சிக்கும், உருவங்களின் வடிவ நிலைப்புக்கும், பருவங்களின் ரீதிக்கும் உயிரே காரணம். காரணமில்லாதது போல், கருவில் உருவாகும் சிசுவில் நுழைகிறது. ஒருநாள், காரணம் இருப்பது போல் வெளியேறி விடுகிறது. உயிரைப் பார்க்க உயிர் தேவை; உயிர் சுடர்விடும் உருவங்கள் தேவை. ஆயினும், எந்தக் கருவியினாலும், உயிரைப் பிடிக்கவோ, அளக்கவோ, தருவிக்கவோ இயலாது.

உயிரின் இன்றியமையாத் தன்மையை ஆய்ந்தும், அறிந்தும் போற்றி வருகிறது மனித இனம். எனவேதான், மானுடம், படைப்பின் சிகரமாகப் போற்றப்படுகிறது. இதனால்தான், ‘அரிதரிது, மானிடராய்ப் பிறத்தலரிது,’ என்கிறாள் பாட்டி. இத்தகைய அறிவு, உலகில் வேறே உயிர்களுக்கு இல்லை. மனிதர்களுக்கு மட்டுமே இருக்கிறது.

*அறிவோடு வாழ்வாரே மானுடர்மற் றெல்லாம்*
*குறியின்றி மாளும் பொறி.*

**(ஆ) அறிவின் திகழ்ச்சி**

அறிவு என்பதுதான் யாது?

உடலோடு வந்தன ஐம்புலன்கள். வடிவங்கள் மண்டிக்கிடக்கும், பொருள்மயமானது உலகம். உயிர், உடலோடிருக்கையில், விளைகிறது உணர்வு. உணர்வு, 'நான்' என்னும் அடையாளத்தோடு புறப்படும்போது எழுகிறது எண்ணம். எண்ணமே மனம். மனம் என்பது, மூளையின் செய்கை அம்சம். ஆயிற்றா?

புலன்கள், வெளிப்புறமாகப் பொருத்தப் பட்டிருக்கின்றன. கண்ணால் உள்ளே பார்க்க முடியாது. மூக்கு, வெளியே விடாமல் மூச்சை வைத்திருக்க முடியாது; பேச்சை, விழுங்க முடியாது; தன் எல்லையில் எந்த ஓசை எழுந்தாலும், கேட்டே தீருகிறது காது; தீயைக் கூடத் தொட்டுப் பார்க்க நினைக்கிறது கை. புலன்கள், ஓயாமல் புறவுலகின் பொருட்களோடு தொடர்பு கொண்டே இருக்கின்றன. இதன் விளைவாலும், உயிர், உடலோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு விட்டதாலும், பிறக்கும்போதே கூட வருகிற சில குணப்பாங்குகளாலும், ஒவ்வொரு மனிதனிலும் பிரத்யேகமான சில உணர்வுகள் எழுகின்றன. அவை, செயலைத் தூண்டுகின்றன. ஒவ்வொரு செயலும், விளைவைத் தருகிறது. அந்த விளைவை, இது இன்பம், அது துன்பம் என்று மனது கருதுகிறது. இன்பம் விழைதல் மனிதனுக்கு இயல்பாகிறது, அது தாற்காலிகமானதாக இருந்தாலும். இன்பம், துன்பத்தில் முடிந்தாலும், மீண்டும் அதேபோல் இன்பத்தை விழைகிறது மனிதமனம். இதுவே அறியாமை. இன்ப துன்பத்திலிருந்து விலகி, அமைதியை நாடுவதே அறிவுடைமை.

அறிவு, மூன்று வகைப்படலாம்:

1. தன்னைப் பற்றிய அறிவு
2. உலக அறிவு
3. உலகு தாண்டிய அறிவு

தன்னுடம்பு மட்டுமல்லாமல், அது எப்படி இயங்குகிறது, எது இயக்குகிறது, இதில் மனம் எங்கே, தான் யார், இவைபோன்றவையே தன்னைப் பற்றிய அறிவாகும். குடும்பத்தாரிலிருந்து தொடங்கி, மற்ற மனிதர்கள், அவர்களுடன் உறவு, மற்ற நாடுகள், கலாச்சார பேதங்கள், விஞ்ஞானம், சரித்திரம், பொதுவாக உலக நடப்பு, இவைபோன்றவை உலக அறிவில் அடங்கும். மூன்றாவது, வானறிவிலிருந்து தொடங்கி, வாலறிவன் வரை தொடர்கிறது. படைப்பு என்பது என்ன? ஏன்? எதற்கு? இறைவன் உண்டா? எனக்கும், அவனுக்கும் என்ன உறவு? பிறக்கும் முன், இறந்த பின், இப்போது, நான் யார்? போன்ற கேள்விகள் இதில் அடங்கும்.

அறிவில், மூன்று தளங்கள் உள்ளன:

1. தகவல்
2. அறிவு
3. தெளிவு

உலக வாழ்க்கை, உலக அறிவு, தகவல் மயமானவை. தகவல் என்பது அறிவுக்கு முகமன் எனினும் தகவலே அறிவாகிவிடாது. நன்செய் நிலத்தில்தான் நெல் செழித்து வளருமென்பது தகவல். அது, சாப்பாட்டுக்கு உதவாது; பயிர்செய்ய நிலம் வாங்கும்போது உதவும். எனவே, ஒரு தகவல் அதுவாகவே ஒருவனை அறிவாளியாக்கிவிடாது. தகவலை வைத்துக்கொண்டு, என்ன நேரத்தில் என்ன செய்யலாம் என்று தீர்மானிப்பது அறிவு. இதைப் புத்தி, விவேகம் என்று சொல்லலாம். துச்சாசனனைப் ‘புத்தி விவேகமில்லாதவன்’ என்று சாடுகிறார் பாரதியார். இது சரி, இது தவறு என்று தெரிந்தும், பிறருக்கும், தனக்கும் ஊறு விளைவிக்கும் செயல்களைச் செய்வதே விவேகமின்மை. இதற்கு நேர்மாறான உதாரணம் விவேகானந்தர். விவேகமே ஆனந்தம்.

தெளிவு?

அறிவுடைமை என்பதும் ஒரு பழக்கம்தான், அறியாமையைப் போலவே! பழைய நூலில் ஒரு வாக்கியம் வருகிறது. ‘அறிவை மதியாதவன் முட்டாள். அறிவைத்

தொழுபவனோ அடிமுட்டாள்,' என்று ஒரே போடாகப் போடுகிறது. என்ன பொருள்? அறிவு என்பது ஒரு கருவி. அது நம் கரத்தில் வசமாகியிருக்க வேண்டுமேயன்றி, அதன் கையில் நாம் சிக்கிவிடக்கூடாது. சரஸ்வதி, அறிவல்ல, அறிவின் தாய். அவள், கல்வியன்று; அவள் கரத்தில், அவள் ஆணைக்காகக் காத்திருப்பதே கல்வி. எனவே, அவளைத் தொழுகிறோம்.

அறிவை ஆள்வதன் மூலம் விளைவதே தெளிவு. ஆக, தகவல் என்பது, அறிவுக்குத் தளமாகிறது. தெளிவே, அறிவின் நோக்கமாகிறது.

### (இ) அறிவின் வரம்பு

எதற்கும் எப்படி ஒரு வரம்புண்டோ, அதைப்போலவே, எதைப்பற்றிய அறிவுக்கும் ஒரு வரம்பிருக்கிறது. வண்ணமற்ற வெட்டவெளி, நம் கற்பனைக்கே வசமாகாத போது, கண்ணில் எப்படித் தென்படும்? நம்மால் உண்ண முடியும்; செரிப்பது யார் அல்லது எது? உடம்போடு தன்னிச்சையாக ஓர் அறிவு வந்திருக்கிறது. அதுதான், உடம்பின் எல்லா இயக்கங்களையும் நடத்தி வருகிறது. அதற்கும், நமது அறிவுக்கும் தொடர்பில்லை. உடம்பைக் கவனமாக வைத்திருப்பதில் மட்டும்தான் நம் அறிவு பயன்படும்.

இதுபோல்தான் உலகைப் பற்றிய அறிவும். ஒன்றுபோல் இன்னொன்று இல்லாததே வாழ்க்கையில் சுவாரசியத்துக்கும், பிரச்சினைகளுக்கும் காரணம். இருப்பது ஒன்றுதான் என்ற தெளிவு நேர்ந்த ஞானிகளுக்கு மட்டுமே பூசலும், பிணக்குமில்லை; தனிப்பட்ட உறவுமில்லை. அது நேரும் வரையில், நாம் வரம்புக்குள் வட்டமடித்தேயாக வேண்டும். அறிவியல் துறையிலும்தான் எத்தனை கண்டுபிடிப்புகள், மறுப்புகள், ஓட்டைகள், சதிகள்! அதற்காக அறிவியலைப் புறந்தள்ளி விடமுடியுமா? வரம்புக்கு உட்பட்டிருக்கிறோம் என்ற நினைவு மறவாமலிருப்பதே, வரம்பிலிருந்து விடுதலை பெற ஒரே வழி.

சொல்லின் செல்வர் திரு சுகி.சிவம், 'துரியோதனன் கண்ட கண்ணன்' என்ற தலைப்பில் கவிதை பாடும்போது,

‘மருத்துவன் கைக் கத்தியடா உந்தன் புத்தி
மடையன் கைக் கத்தியடா எந்தன் புத்தி’

என்று, இந்தக் கருத்தை எத்தனைக் கச்சிதமாக வெளிப்படுத்தியிருக்கிறார்! ஆதிநாள் முதல், இந்த அறிவியற் காலம் வரை, அறிவின் வரம்பு மட்டுமன்றி, இந்த அறிவே கூட மானுடத்திற்குச் சவாலாகவே இருந்து வந்திருக்கிறது.

‘நம்புவதே வழி,’ என்கிறார் பாரதியார். சிலவற்றை நம்புவதால் ஒன்றும் மோசம் போய்விட மாட்டோம் என்ற உண்மையை வலியுறுத்தவே, ‘நம்பினார் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு,’ என்றார். நம்பாமைக்கு அச்சமும், ஐயமும், நம்பிக்கைக்குத் துணிவும், அன்பும் பின்னணியாய் அமைந்திருப்பதை நாம் பல தளங்களிலும் கண்கூடாகக் காணலாம்.

மனிதன் என்னும் படைப்புக்கு மூலம் எது? இந்தக் கேள்விக்கு அறிவியலின் விடை குளறுபடியாகவும், ஆன்மீகத்தின் விடை போதாதது போலவும் தோன்றுகிறது. குளறுபடி, போதாமை இவற்றுக்குக் காரணம், அடிப்படைக் கேள்விகளுக்கு வார்த்தையில் விடை கிடையாது. நேரடி அனுபவத்திற்கு எதுவும் நிகராகவோ, மாற்றாகவோ அமைய முடியாது. இருப்பினும், போதாத விடைதான் என்ன? “உலகம் என்பது உருவாகும் முன்பே, வெவ்வேறு பரிணாம வளர்ச்சி நிலையில், மேலும் முன்னேற, தேகங்களுக்காகக் காத்திருந்தன ஆன்மாக்கள்,” என்பதே அது. பண்டைய நூல்களில், ஒரு கருத்தைப் பலாத்காரமாகத் திணிக்கின்ற அநாகரிகம் இல்லை. ஏன், ஆன்ம விடுதலை என்பது கூடக் கட்டாயமாகச் சொல்லப் படவில்லை! ‘தவத்தில், எம்முள் ஆழ்ந்து, நாங்கள் இந்தவிதம் அறியலுற்றோம். நீங்களும் ஆராய்ந்து பார்த்து, உங்களுக்கும் இது உண்மையென்று பட்டால், நீங்கள் ஏற்றுக் கொள்ளலாம்,” என்ற பணிவும், நாகரிகமுமான போக்கே காணப்படுகிறது. இந்தக் காய்கறியில் இன்ன விட்டமின் இருக்கிறது என்று சொல்லப்பட்டால் ஏற்றுக் கொள்கிறோமே! இன்ன ஊருக்கு இத்தனை தொலைவு என்று மைல்கல்லில் எழுதியிருந்தால் நம்புகிறோமே! அதுபோலத்தான் பெரியோர் வாக்கு நமக்குப் பிரமாணமாகிறது. எந்த விதமான ஊகமுமின்றி எதையும் ஆராய முடியாது. ஏதாவது ஓர் ஆரம்பத்தை ஏற்றுக்

கொண்டுதான் ஆக வேண்டியிருக்கிறது. (இதுவே “ஆதி சேஷன்.” முதல் மிச்சம்!) இப்படிப் பார்க்கும்போது, போதாத விடை போதுமானதாகவே படுகிறது! அடிப்படைக் கேள்விகள் உண்மையிலேயே தீவிரமாக இருந்தால், தன்னுள்ளே தானாழ்ந்து ஒரு கை பார்க்க வேண்டியதுதான்! வரம்புற்ற அறிவைத் தாண்டி உண்மையை அறிய வேண்டுமானால், அதற்கு வரம்பற்ற நம்பிக்கை தேவைப்படுகிறது.

இருப்பினும், எல்லோரும் சந்திக்கக் கூடிய தளங்கள் இருக்கத்தான் செய்கின்றன:

1. பிறப்புக்கு முன், இறப்புக்குப் பின் என்னவென்பது மர்மமாகவே இருக்கிறது (நேருக்கு நேர் தெரிந்து கொள்ளாத வரை, பதில்கள் நம்ப முடிந்த ஆனால் பயனில்லாத விளக்கங்களாகத்தான் உள்ளன)

2. பிறப்பு, வளர்ச்சி, பிணி, தேய்மானம், இறப்பு என்பது எல்லா உயிரினங்களுக்கும் பொது

3. வாழ்க்கை நிலையற்றது. உயிருக்கு உத்தரவாதம் கிடையாது

4. ஒழுக்கம், நிர்வாகம் இவை, தனி மனிதனுக்கும், சமுதாயத்திற்கும் அவசியம்

5. குடும்பம் என்கின்ற அமைப்பு, சமூக நலனுக்கும், நாட்டின் பண்பாட்டுக்கும் அடிப்படை

இந்த ஐந்தாவது கருத்தில்தான், திருமணத்தின் அவசியத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது.

## 2. வாழ்தல் என்பது…

*அலைபாயும் நெஞ்சே! அறிந்துகொள் ஒன்றை*
*நிலையாமை ஒன்றே நிசம்*

உண்மைதான். வாழ்க்கை நிலையற்றதுதான். நீர்க்குமிழிதான். நம்மில் பெரும்பாலோர் இதை மேம்போக்காக, அடுத்தவர் வீட்டில் துயரம் நேரும்போது சொல்கிற வார்த்தையாக, அரிப்புக்குச் சொறிந்து கொள்ளும் ஆனந்த வேதாந்தமாகச் சொல்லி வருகிறோம். ஆனால், வாழ்வின் நிலையாமையை நன்குணர்ந்து எப்போதும் நினைவில் வைத்திருப்பவர்கள், வாய் வார்த்தையாகப் பேச மாட்டார்கள்; வறட்டு வேதாந்தப் பந்தல்கள் போட மாட்டார்கள். மாறாக,

*நிலையாமை ஒன்றே நிசமதனால் வாழ்க்கை*
*விலையற்ற விண்தந்த வாய்ப்பு*

என்பார்கள். வாழ்க்கையை விபத்தாகக் கருதுபவர்கள், வாழ்க்கையை விரும்பி வாடுகிறார்கள். வாய்ப்பாக ஏற்றவர்களோ விரும்பி வாழ்ந்து வாகை சூடுகிறார்கள். ***"சும்மா உயிரோடு இருப்பதன்று வாழ்க்கை. உயிர்ப்புடன் வாழ்வதே வாழ்க்கை,"*** என்பார் என் குருநாதர் சற்குரு ஸ்ரீ சிவானந்த மூர்த்தி அவர்கள். நமக்கு வழங்கப்பட்டுள்ள பேற்றை அறிந்தால், விதிக்கப்பட்டுள்ள நேரத்தின் மர்மம் நம்மை அச்சுறுத்தாது. மாறாக, அதன் அருமை விளங்கி, நமது பொறுப்புணர்ச்சி அதிகரித்து, 'செய்கையில் கீர்த்தி' சேரும். நிலையாமையை நம்மைக் காட்டிலும் நன்றாகவே அறிந்திருந்த திருவள்ளுவர், "வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான்," என்ற ஒப்பற்ற சொற்றொடரை ஏன் நமக்கு வழங்கினார் என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். நிலையாமையின் காரணமாக, வாழ்க்கை என்பது பொருளற்றதுதான். ஆனால், வாழ்தல் என்பதற்கு இலக்குண்டு, குறிக்கோளுண்டு.

வாழ்தல் என்றால் என்ன?

**‘தன்னை அறிதல் தலையாய பொறுப்பு. மன்னுயிர்பால், செயற்பூர்வமான அக்கறை பேணல் அனைவர்க்கும் கடமை,’** என்பது வேதவாக்கு. இவைதான் வாழ்க்கை என்னும் வாய்ப்பு வழங்கப்பட்டதன் காரணங்கள். இதை உணராமற் போனால், உயிர்வாழ்க்கை, பாரதி சொன்னதுபோல், ‘தேடிச் சோறுநிதம் தின்று,’ என்று துவங்கி, ‘கொடுங் கூற்றுக்கிரையெனப் பின் மாயும்,’ வெட்கக்கேடான வேடிக்கையாக அமைந்துவிடும். இதை உணர்ந்து, நம்மைத் தயார்படுத்திக்கொண்டு நடக்கும் நடப்பே வாழ்தல். வாழ்க்கையை விதி நடத்துகிறது. ஆனால், வாழ்தல் நம் கையில்தான் உள்ளது.

தனியாகவே வந்து தனியாகவே போனாலும், தனியாக வாழ்வதில்லை நாம். அப்படி வாழவும் முடியாது. பிறர் உதவியின்றி, நாம் ஒரு கணமும் வாழ முடியாது. அந்தப் பிறருக்கும் நமக்குமிடையே ஒரு சார்பு இருக்கிறது. அது பண்டுதொட்டு வருவது; பரஸ்பரமானது; பிரபஞ்ச இயக்கத்தின் இயல்பான நியதியது’ சிருஷ்டியின் சேதியது. நம் குடும்பத்தினர், நண்பர்கள் போன்ற ஒரு சிலரையே நாமறிவோம். ஆனால், முகம்தெரியாத எத்தனையோ பேர்களின் தயவில்தான் நாம் அன்றாடம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம் வாசலில் செய்தித்தாள் வீசுகிற சிறுவன், பால்கொண்டு வருகின்ற பிள்ளை, பூக்கொண்டு வருகின்ற அம்மாள் போன்றவர்களில் எவர் பெயரும் நமக்குத் தெரியாது. ‘சேவகர் இல்லாவிடிலோ செய்கை நடப்பதில்லை,’ என்பதற்குரித்தான வீட்டு வேலைக்காரப் பெண்மணியின் முகவரி, அவள் கணவனின் முகம், நமக்குத் தெரியாது. பாதாளச் சாக்கடையில் இறங்கி, சமூகத்தின் கழிவுகளை அகற்றி வயிற்றைக் கழுவும் தீனரின் முகத்தை நாம் பார்த்ததே இல்லை; பார்க்கத் தோன்றியதே இல்லை. இப்படிப்பட்ட பலரின் பெயர்களோ, முகவரிகளோ, விவரங்களோ தெரியாது போனதால் இவர்களைச் சாராமல் வாழ முடிகிறதா?

இவர்கள் மட்டுமல்லாமல், நாம் பயன்படுத்துகின்ற கணக்கற்ற பொருட்கள், கருவிகள், வசதிகள், வாசலில் கண்சிமிட்டும் பூக்கள், தோட்டி வேலை செய்கின்ற காக்கை, நேரத்தில் பெய்யும் மழை, நிமிடத்தில் மாறும் பகல், -- இவைபோன்ற பலப்பலவற்றுக்கும் பின்னாலிருந்து செயற்படும் மனிதர்கள், உயிரினங்கள்,

மற்றும் இயற்கை இவற்றின் மகத்தான உழைப்பு, உதவி இவற்றைச் சாராமல் வாழவே முடியாது.

சார்ந்து வாழ்தல் என்பது படைப்பின் தத்துவம். இந்த அறிவில்லாமற் போனால், கூடி வாழ்தல் என்பது சாத்தியமே இல்லை. உலோகம் அல்லது கனிப்பொருட்கள், தாவரம், விலங்கினம், மானுடம், இயற்கையின் சக்திகள், இவை ஒன்றையொன்று இயற்கையிலேயே சார்ந்துதானிருக்கின்றன. தங்கம், பேசாது. தாவரம், அறிக்கை விடாது. விலங்குகள் கவிதை எழுதுவதில்லை. மழை, பஞ்சப்பாட்டுப் பாடாது. சிந்தனை என்கின்ற மகத்தான சக்தி வாய்க்கப் பெற்ற மனிதனே இவையனைத்தையும் செய்யத் தக்கவன்; செய்கிறவன். அவனே, இந்த அடிப்படையான சார்ந்து வாழ்தலை ஆழமாகச் சிந்திக்க வேண்டும். அப்போது, எல்லையற்ற இந்தப் பிரபஞ்சத்தில், தான் ஓர் எள்ளளவும் இல்லை என்ற தகவல் உறைக்கும். ஆனாலும், தனக்கோர் இடம், அவசியம், கடமை இவை உள்ளன என்ற அறிவு புலனாகும். தனது நலன், சமுதாய நலனை மிகவும் சார்ந்தே இருக்கிறது என்பது புரியும். தனது நேர்மை, ஒழுக்கம், போன்றவை பொது நலனில் கட்டாயம் பங்கு வகிக்கின்றன என்பதும் புரியும். அதன்பிறகு, எந்த உயிரினமும் அன்னியமில்லை, தனக்கு வெளியே எதுவுமில்லை என்ற ஞானமாகிய தெளிவு நேரும்.

இந்தத் தெளிவும், இதற்கேற்ப நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ளும் முறைமையும், அந்த முறைமையின்படி நடக்கும் நடப்பும்தான் வாழ்தல் எனப்படும்.

*ஆக்கைபொய்; அண்டமெல்லாம் அஃதுள்ளே காண்பதனால்*
*வாழ்க்கைமெய்; ஒப்பற்ற வாய்ப்பு*

*நடக்க அறமும் கடக்கத் துறவும்*
*உடைத்துள்ள வாழ்வே உயர்வு*

*உதவி, ஒதுங்கல் உயர்ந்த பதவி*
*இதுவன்றோ வாழும் இயல்பு!*

*தன்னை அறிதலும் மன்னுயிர் ஓம்புதலும்*
*நன்றான வாழ்வின் நயம்*

*பிறப்பு விபத்தில்லை பென்னம் பெரிய*
*பொறுப்பென் றுணர்ந்தால் சிறப்பு*

*சூழ்ந்த விதியின் சுவடறிய முன்தோன்றும்*
*வாழ்வே நமக்குற்ற வாய்ப்பு*

என்று சொல்லிக் கொண்டே போகலாம். அப்படிப்பட்ட பொன்னான வாய்ப்பு, நேரே நாமறிந்த ஒரே வாய்ப்பு இந்த வாழ்க்கை. வாழ்வதன் மூலமே புரிந்து கொள்ளக் கூடிய வரம் இந்த வாழ்க்கை. எனவே, உணர்ந்து வாழ்வதன் மூலமே மனிதன் தரம் பெறுகிறான். இந்தத் தரம், பிறப்பால் வருவதல்ல. மனிதப் பிறப்பு, உயிர் தரம்பெற ஓர் வாய்ப்பு. இதுவே வாழ்தல் எனப்படும்.

இதற்குக் குடும்பமே துவக்கம். குவலயத்தைத் தாண்டியும் இதன் எல்லை நீள்கிறது!

## 3. குடும்பம் என்பது....

*குவலயம் என்னும் குடும்பத்தின் ஒப்பில்*
*அவயவமே நாம்வாழும் வீடு*

ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் அரிச்சுவடி படித்தோம். அதன் பிறகு, மருத்துவர், பொறியாளர், விஞ்ஞானி என்று பலப்பல துறைகளிற் புகுந்து பொலிந்தோம். ஊழியமோ, வாணிபமோ புரிந்து ஒரு நாள் ஓய்வும் பெறுகிறோம். அன்றும், என்றோ படித்த அரிச்சுவடி மாறவே இல்லை! அப்படியேதான் இருக்கிறது! அன்று நாம் கற்காத புதிய எழுத்துக்கள் எதுவும் இன்றுவரையும் சேர்க்கப்படவுமில்லை! வரிவடிவமோ, ஒலிக்குறிப்போ மாறவுமில்லை!

அதேபோலத்தான், குடும்ப வாழ்க்கையை உணர்ந்து கற்றால், அந்தக் கல்வி நம்மை அலுவலகம், நண்பர் வட்டாரம், சமூகச் சூழல், மட்டுமன்றி ஆன்மீக வழியிலும் துணையாக வரும். வாழ்தலின் இருபெரும் கூறுகளில், ஒன்று ஆன்மீகம், இன்னொன்று சமூகநலம் விழைந்து செயற்படல் என்று கண்டோம். குடும்ப வாழ்க்கையின் உட்பொருளை உணர்ந்து இயங்காதவர்க்கு, இரண்டுமே சாத்தியமில்லை. ஆக, அவர்கள் வாழ்வின் பயனையே இழந்து விடுகிறார்கள்.

குடும்ப வாழ்க்கை ஒரு பள்ளிக்கூடம். வீட்டில் கற்பதை வெளியில் கற்க முடிவதில்லை. மேலும், வீட்டில் கற்பது வெளிவாழ்க்கைக்கும் பெரிதும் பயன்படுகிறது. சரி, குடும்பம் அப்படி என்னதான் கற்றுத் தருகிறது?

### 1. தலைமையை வணங்கல்

தந்தைதான் குடும்பத் தலைவர். தாய்தான் தலைவி. நாம் அவர்களைச் சார்ந்து வாழும்போது, அவர்கள் பணித்தபடிதான் நடந்துகொள்ள வேண்டும். அப்பா, ‘இத்தனை மணிக்குத் திரும்பிவா!’ என்றால் வந்தேயாக வேண்டும். அம்மா, ‘இதைச் சாப்பிடு,’ என்றால் பிடிக்காது என்று சொல்லாமல் சாப்பிட வேண்டும். சார்ந்திருப்பவனுக்குச் சொந்தக் கருத்து இருக்கலாம். ஆனால், அதைச்

செயற்படுத்த வேண்டும் என்று நினைக்கலாகாது. அன்றாட விஷயங்களில், பெற்றோரின் சொற்படிதான் நடந்துகொள்ள வேண்டும். அவர்களை எதிர்த்துப் பேசுவதோ, அவர்களை விடத் தனக்கு அதிகம் தெரியும் என்று நினைப்பதோ, அவர்களைப் பற்றி மற்றோரிடம் குறை சொல்வதோ முறையற்ற போக்காகும்.

நமது நலம் விழைதலன்றி, நம்பொருட்டு வேறு கொள்கை இல்லாதவர்கள் பெற்றோர்கள். அவர்களிடம் அன்பும், மரியாதையும் இல்லாதவன் பின்னாளில், வீட்டிலும், வெளியிலும் புறக்கணிக்கப் படுவான்.

நமது அபிப்பிராயங்களை நாம் நயமாகச் சொல்லலாம். ஆனால், முடிவெடுப்பது அவர்களது உரிமை, கடமையும் கூட. ஒரு வீட்டில் ஆளாளுக்கு முடிவெடுக்க ஆரம்பித்தால் அது தலைக்குத்தலை நாட்டாமை என்றாகிக் குடும்பத்தில் குழப்பமே மிஞ்சும். நாம் அலுவலகத்தில் சேரும்போதும், பெரிய பொறுப்பை நிர்வகிக்கும்போதும் தலைமையை ஏற்பது என்பதன் அவசியம் விளங்கும். அந்தப் பாடத்தின் முதல் அத்தியாயத்தை வீட்டிலேயே கண்டோம் என்பதும் புரியும்.

## 2. கூடி வாழ்தல்

பிரபஞ்சத்தின் இயல்பான சார்ந்து வாழ்தல் என்ற தத்துவத்தைப் போதிக்கிறது குடும்ப வாழ்க்கை. நாலு பேரோடு சேர்ந்து வாழத் தெரியாதவனுக்கு நல்ல நண்பர்கள் வாய்ப்பதில்லை. அலுவலகத்தில் நல்ல பெயரில்லை. சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க அங்கீகாரம் எதுவுமில்லை. கூடி வாழும்போது தனிமனிதர்களின் திறன் ஒரு கூட்டுச் சக்தியாகப் பரிமளிக்கிறது. சின்னப் பொறிகள் சேர்ந்து, அழகான தீபமாகச் சுடர்கின்றன. தனிமனிதனின் திறமைகள் வெளிப்படுகின்றன. இயலாமைகள் கடக்கப்பட்டுப் புதிய திறன்களாக வடிவெடுக்கின்றன.

குழுமனப்பான்மை என்பதைக் குடும்பம்தான் கற்றுத் தருகிறது. கால்பந்து விளையாட்டில், எல்லோரும் ‘கோல்’ போட முடியாது. இலக்கருகே விரைபவனுக்குப் பந்தை உந்தித் தள்ளத் தெரியவேண்டும். வெற்றியில் எல்லோர்க்கும் பங்குண்டு – கோல்போஸ்டை விட்டு வெளியே வராத கோல்கீப்பர்

உட்பட. அப்படித்தான் குடும்பமும். யார்யாருக்கு என்னென்ன பொறுப்பு இடப்படுகிறதோ அதை அவர்கள் சிரத்தையுடனும், உற்சாகத்துடனும் செய்தல் வேண்டும். இதனால், வெற்றியில் சரிசமமான பங்கும், மகிழ்ச்சியும் கிடைக்கிறது. பையன் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் வாங்கினாலோ, பெண் பாட்டுப் போட்டியில் பரிசு பெற்றாலோ குடும்பமே சேர்ந்து மகிழ்ந்து கொண்டாடுகின்றதன்றோ!

மனிதன் தனியே இருந்தால் ஏதாவது இழப்பு அல்லது தோல்வி அல்லது அதிர்ச்சி அவனை நிலைகுலைய வைத்து விடுகிறது. இதுவே அவன் குடும்பத்தில் கூடி வாழ்பவனானால், அவன் துயரத்தைப் பங்கிட்டுக் கொள்ளப் பல இதயங்கள் தயாராக இருக்கின்றன. நமது நம்பிக்கைக்கும், துணிவுக்கும் நாமே காரணம் என்றெண்ண வேண்டாம்! குடும்பத்தாரின் அன்பு, நம் நலனைக் கோரும் மனப்பாங்கு, நேரடி ஆதரவு, ஏன், பிரார்த்தனைகளும் கூடக் காரணமாகின்றன. ‘கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’ என்ற தத்துவத்தைக் குடும்பத்தைப் போல எதுவும் கச்சிதமாகக் கற்றுத் தருவதில்லை. அதனால்தான் ஒரு நல்ல குடும்பத்தைப் பார்ப்பதற்கே பெரு மகிழ்ச்சியாயிருக்கிறது.

### 3. விட்டுக் கொடுத்தல்

கொடுக்காமல் பெறமுடியாது.

எது நமக்கு வேண்டுமோ, அதைத் தந்தால்தான் பெற முடியும்! ஆம், மகிழ்ச்சி வேண்டின், மற்றவர்களை மகிழ்விக்காமல் அது கிடைக்காது. மதிக்கப்பட வேண்டுமா, அடுத்தவரை மரியாதையாக நடத்தினால் மட்டுமே அது சாத்தியமாகும். அன்பைக் கொடுக்காமல் பிறரிடமிருந்து அன்பு கிட்டாது. அதற்கும் மேலாக, விட்டுக் கொடுத்தால் விளைவது நன்மையே! இருமுகப்பட்ட இந்தப் பேருண்மையை நாம் குடும்பத்தின் மூலமாகத்தான் அறிகிறோம்.

இதற்குத் தலையாய உதாரணம் தாய்தான். இந்த உலகத்தில், நாம் எப்படி இருந்தாலும் நம்மை நேசிக்கும் ஒரே ஜீவன் தாய்தானே! அவளைப் பாருங்கள்.

பசியதிகமுள்ள வளரும் குழந்தைக்குத் தன்பங்கு உணவையும், தாராளமாக, முழுமனதோடு, சத்தம் போடாமல் கொடுத்து விடுகிறாள். தனக்குப் போக மிஞ்சியதைத் தருவது தானம். தனது அனைத்தையுமே வழங்கி விடுவது தியாகம். ஆம், அளந்து கொடுப்பது தானம்; அனைத்தையும் தருவது தியாகம். இதனால்தான், வேதம் கூட, **“செயலாலன்று; மக்கட்பேறால் அன்று; செல்வத்தால் அன்று; தியாகத்தால் மட்டுமே அமரநிலை எய்தப்படுகிறது,”** என்று அறுதியிட்டுச் சொல்கிறது. இது தாய்க்கு இயல்பு. இதை, மகன் ரொம்பப் பிற்பாடுதான் உணர்கிறான்.

தந்தை, குடும்பச் செலவைச் சமாளிக்க அதிக நேரம் வேலை செய்கிறார். சகோதரி, குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துச் சம்பாதித்ததில், சகோதரனுக்காக ஒரு பரிசை ரகசியமாக வாங்கி வைத்திருக்கிறாள். தாய், தனது உணவையே விட்டுக் கொடுக்கிறாள்; தந்தை, தனது நேரத்தை விட்டுக் கொடுக்கிறார்; தங்கை, தனது சுகத்தை விட்டுக் கொடுக்கிறாள். இவர்களில் எவரும் தாம் ஏதேனும் இழந்ததாகவோ, அட, தாமேதும் சிறப்பாகச் செய்து விட்டதாகவோ கூட எண்ணுவதில்லை. மாறாக, மௌனமாய், மறைவில் சிறிது மகிழ்ந்து கொள்கிறார்கள். இப்படிப் பலவிதமாக விட்டுக் கொடுத்துப் பழகுவதே ஒரு நல்ல குடும்பத்தின் லட்சணமாக இருக்கிறது. இளம்வயதில் தந்தையை இழந்த குடும்பத்தை, மூத்தமகன், தனது அனைத்து நலன்களையும் -- திருமணம் உட்பட – தள்ளிவைத்துவிட்டுத் தாங்குகிறான். யாருடைய கட்டாயத்தின் பேரிலும் அவன் இந்தப் பொறுப்பை ஏற்கவில்லை. இன்ன சூழ்நிலையில் இப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதை அவனுக்குக் குடும்பமே உட்பாடமாகச் சொல்லித் தந்திருக்கிறது. சிரமமான நேரத்தில், சிக்கலான பொறுப்பை அவன் முன்வந்து மேற்கொள்கிறான். குடும்பம், அவனை, விலைமதிக்கவொண்ணாத முத்தாக ஏன் கொண்டாடாது?! முன்பு, தந்தை என்கின்ற தலைமையைப் பணிந்தான். இன்று, தலைமைப் பொறுப்பை இயல்பாக ஏற்கிறான். விட்டுக் கொடுக்க வீரம் வேண்டும். நேசம், நிறைய வேண்டும். நம்பிக்கை வேண்டும். இந்த மனிதத் தன்மைகள் குடும்பத்தில் இயல்பாகவே ஊட்டப்படுகின்றன.

## 4. உறவுகள்...உணர்ச்சிகள்

குடும்பத்தில், உறவுகள் என்பவை நேர்பவை! அவற்றை நாம் ஏற்படுத்திக் கொள்ள முடியாது! உறவுகளோடுதான் பிறக்கிறோம். அதில், நம் விருப்பு வெறுப்புக்கு இடமில்லை. நேர்ந்த உறவுகளை நிர்வகிக்கத் தெரிந்தால், வெளி உறவுகளும் பிசிறின்றி அமையும். நாட்டில் ஒற்றுமை உணர்ச்சி குறைவாக இருப்பதற்குக் காரணம், வீட்டில் உறவு சரியாக இல்லை என்பதே. இங்கே உறவின் முக்கியத்துவம் புரியவில்லை என்றால் அங்கே அது வரவே வராது. ஆனால், இதில் கவனிக்க வேண்டிய நுண்மை ஒன்றிருக்கிறது. வெறும் பற்று, உறவாகாது. பற்றில் எதிர்பார்ப்புகள் அதிகம்; புரிந்துகொள்ளுதல் குறைவு. பற்று, நமக்குப் பளுவாக இருப்பதோடல்லாமல், அடுத்தவர்களுக்கும் பாரத்தை ஏற்படுத்தும். பற்று, அயர்வை ஏற்படுத்தும். அன்பு, ஆசுவாசத்தைக் கொடுக்கும். ‘நாம் இவர்களுக்குப் பிறந்திருக்கிறோம்; நம்முடன் பிறந்தவர்கள் இவர்கள்; அப்படிப்பட்டவர்களை ஆதரிப்பதும், போற்றுவதும், நேசிப்பதும் அவர்களுக்கு ஒத்தாசையாய் இருப்பதும் நம் கடமை,’ என்ற அறிவு எவனுக்கு இருக்கிறதோ அவனே உறவைச் சரியாக அறிந்தவன். அவனுக்கு நாடே வீடாகி அதுவும் போதாமல் அது உலகவாவி வானிலும் வளர்கிறது.

இதன் இனிய, எளிய ஆரம்பம், வீட்டில்தான் துவங்குகின்றது. தங்கை ஏதோ சின்னத் தவறு செய்திருப்பாள். அதை, அண்ணன்தான் செய்தானென்று எண்ணிய தந்தை, அவனைப் போட்டுக் காய்ச்சுகிறார். அவன், அவளைப் போட்டுக் கொடுக்காமல், மௌனமாக இருக்கிறான். அவனது நேசத்திற்கும், மனவுறுதிக்கும் ஏற்பட்ட சவாலை அவன் வெல்கிறான். பின்னாளில், அந்தத் தங்கை, அவனுக்காக என்னதான் செய்யமாட்டாள்?

நாம், சிந்திப்பதில்லை; கவலைப் படுகிறோம். இரண்டுக்கும் இடையே உள்ள பேதம் நமக்குப் புரிவதில்லை. அதேபோல், நாம் புத்தியுடன் செயற்பட வேண்டிய தருணங்களிலெல்லாம், அப்படிச் செய்ததாகவே நினைக்கிறோமேயொழிய, உணர்ச்சி வசப்பட்டுக் காரியத்தைக் கெடுத்து விடுகிறோம். வீட்டுக்குத் தாமதமாகத் திரும்பிய பெண்ணை, ‘என்னம்மா ஆச்சு?’ என்று கேட்க நினைத்து,

பதட்டத்தில், 'எங்கே சுத்திட்டு வர்றே?' என்று கேட்டுவிட்டு, வீடு அழுகைக் கூடமான பிறகு, 'அப்படி நான் என்ன தப்பாப் பேசிட்டேன்?' என்று வேறு புலம்புகிறோம்!

ஆனால், சற்றும் பதறாத தந்தைகளையும், தாய்களையும் நாம் பார்க்கத்தான் செய்கிறோம். எழுதப் படிக்கத் தெரியாத வயதான மூதாட்டிகள், வீட்டைத் தாக்கும் சிக்கலான சூழ்நிலைகளைக் கையாளும் லாகவம், பக்குவம், இவற்றில் ஒரு சிறிதும், பெரும்படிப்புப் படித்தவர்களிடம் காணக் கிடைப்பதில்லை! உணர்ச்சிகளை, புத்தி ஆள வேண்டும். அந்த புத்திக்கு நலனே குறிக்கோளாக அமைய வேண்டும். அப்போது நியாய, அநியாய நிலைமைகளும் தெளிவாக விளங்கும். அதே சமயம், கண்ணுக்குக் கண், காதுக்குக் காது போன்ற அடாவடி அணுகு முறையும் இருக்காது. அனைவரின் நலனையும் கருத்தில் இருத்திச் சிந்திக்கும், செயற்படும் திறன் நன்கமையும்.

சேர்ந்து வாழ்வதன் மூலமே நெருடல்கள் சரியாகிப் போகின்றன என்பதையும், எந்தக் காயத்தையும் காலம்தான் ஆற்றும், பொறுமையே சிறந்த படைக்கலன் என்னும் வாழ்வின் இன்றியமையாத பாடத்தையும் கூடி வாழும் கூடமான குடும்பம்தான் சொல்லித் தருகிறது.

ஐந்து வயதில், அப்பாவின் மடியில் உட்கார்ந்த மகள், பதினைந்து வயதில், பின்னே வந்து கழுத்தைக் கட்டிக் கொள்கிறாள். பிறகு, அவள், அவர்மீது வைத்திருக்கும் அன்பு பேணப்பட, அவளுக்கு இடைவெளி அவசியமாகிறது. அணுக்கம், தொலைவு இவையிரண்டுமே உறவின் நலத்திற்குத் தேவை. இந்த நுணுக்கத்தை வீட்டைத்தவிர வேறெங்கும் காயப்படாமல் கற்க முடியாது.

அம்மா மூலம் அப்பாவை அணுகுவது என்கிற குடும்ப யுக்திதான், உமை மூலம் சிவனின் அருளை நாடுவது என்பது வரை கொண்டு போகிறது! விருந்தினர்களை உபசரிப்பது, அன்னியர்களிடம் நடந்துகொள்ளும் முறை, பண்டிகைகளை எல்லோரும் சேர்ந்து கொண்டாடும் விதம், ஒருவருக்கு உடம்பு சரியில்லை என்றால் டாக்டரிடம் ஓடும் பாசம், தனது கனவுகளைப் பகிர்ந்து கொள்வது,

அவரவர் வேலைக்கு அவரவர் பொறுப்பேற்பது, அனைவரையும் சமமாகப் பாவிப்பது, சேர்ந்துண்டு மகிழ்வது, ஞாயிற்றுக் கிழமையின் பிரத்யேகச் சோம்பல், படுக்கப் போகுமுன் தலையணைச் சண்டை, நண்பர்களைக் கூட்டிவருதல், விடுமுறைக்காலப் பயணங்கள், எல்லோரும் வாய்விட்டுச் சிரிப்பது, இறுக்கமான சூழ்நிலைகளைச் சமாளிப்பது, எது நடந்தாலும் ஒருவரையொருவர் விட்டுக் கொடுக்காமல் இருப்பது போன்ற எத்தனையெத்தனையோ விலைமதிப்பற்ற பாடங்களைக் கற்றுத் தந்து, எப்படி உறவுகளை நிர்வகிப்பது, எவ்விதம் உணர்ச்சிகளைக் கையாள்வது என்று அறியவைத்து நம்மை ஆளாக்குவது குடும்பம்.

## 5. பண்பாட்டின் அச்சாணி

என் குருநாதர் கூறுவார்: **"பிறநாடுகளுக்கும் நம் நாட்டுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. அங்கெல்லாம், பண்பாடு என்பது, மதத்தின் அங்கம். இங்கோ, மதம் என்பதே பண்பாட்டின் அம்சமாக விளங்குகிறது."** ஆம், நம் நாட்டில், தொன்றுதொட்டு நிலவிவரும் ஒரு தூய வாழ்க்கை நெறிதான், சமயம், சாதி எதுவும் சாராத ஒரு பரந்த வாழ்க்கை முறைதான், பிற்பாடு மதங்களாகச் சற்றே மலினப்பட்டது என்றே சொல்லலாம். இருப்பினும், இன்றும் கூட நம் நாட்டில், சமுதாயத்தில், மனிதத் தன்மையும், நேயமும், பண்பாடும் வாழ்கின்றன என்றால் அதற்குக் காரணம் குடும்பம் என்கின்ற அமைப்பேயாகும். குடும்பம் என்ற ஒன்று இல்லையென்றால், நாம் மெத்தப்படித்த, பல திறமைகள் உள்ள, செல்வம் மிகுந்த காட்டுமிராண்டிகளாகத்தான் திரிவோம். ஒழுக்கம் என்ற உணர்வு தனிமனிதனுக்கும் தோன்றி அது சமுதாயத்திற்கும் உரியதாக ஆனதற்குக் காரணம் குடும்பம் என்னும் அமைப்பே. உயிருக்கு உத்தரவாதம் இல்லாத வாழ்க்கையில், ஒன்றுக்கும் உதவாத இருப்பில், வைக்கோலைத் தின்று வென்னீர் குடிக்கும் சுவாரசியமே உள்ள உலகவாழ்வில், இனிமை சேர்ப்பது குடும்பமும் அதனால் விளைந்த உறவுகளும், பொறுப்புகளும்தான்.

நாகரிகம் என்பது உடையிலோ, உயர்ந்த கட்டிடங்களிலோ, ஏட்டுக் கல்வியிலோ இல்லை. இரக்கமும், அரக்கமும் இடைவிடாது போரிடும் தளமே மனித மனம்.

மனிதப் பண்புகளும், உயர்ந்த நேயமும் மேலோங்கி இருப்பதே நாகரிகம். அதேபோல், ஒரு நாட்டின் சொத்து, அதன் செல்வமோ, போர்க்கலன்களோ அல்ல. மனித நாகரிகமே ஒரு நாட்டின் உண்மையான செல்வமாகும். பண்பாடே பாரத நாட்டின் பரம்பரை இயல்பு.

பெண்ணே வீட்டின் விளக்கு. வீடே பண்பாட்டின் முற்றம். குடும்பமே கலாசாரத்தின் அத்திவாரம். வீடு ஆடினால், நாடு விரிசல் காணுகிறது. நாடு நலிந்தால், நலனேது, பலனேது, நாம்தான் ஏது? இதைவிடவும் குடும்பத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்வதற்கில்லை. அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த குடும்பம் என்னும் அமைப்புக்கு ஆதாரமே திருமணம்.

*அறம்பொருள் இன்பத்தில் மாசற நின்றால்*
*திறந்திடும் பேரின்ப வீடு*

## 4. திருமணம் என்பது…

*திருமணம் என்பது தெய்வத்தின் தீர்ப்பே*
*இருவரில் ஒன்றே இருப்பு*

பலவிதமான திருமணங்கள், பலவகைப்பட்ட சடங்குகள் பாரத நாட்டில் பல்லாண்டு காலமாகவே இருந்து வருகின்றன. அவற்றில் சில வழக்கொழிந்து போயின. சில, புது வழக்கங்கள் என்னும் பூச்சுப் பூசிக் கொண்டன.

இன்று, நாம் எங்கே போகிறோம் என்பதே தெரியாமல், எங்கோ ஓடிக் கொண்டே இருக்கிறோம். அவசர வாழ்க்கை, நம்மை விரட்டி விரட்டித் தெளிவற்ற நிழல்களைத் துரத்தச் சொல்லித் திரியவைக்கிறது. நாம் என்ன சாதிக்கிறோம் என்று நமக்குத் தெரியவில்லை. ஆனால், நம்மில் எவருக்கும் எதற்குமே நேரமில்லை. மனைவியின் ஆசைகள் நம்மில் பலருக்குத் தெரியாது. குழந்தைகளின் கண்களைத் துழவி அவர்களின் கனவுகளைத் தரிசிக்கும் அக்கறை நமக்கு இல்லை. பணம் என்பது பேயாய் நம் பிடரியில் அமர்ந்து நம்மை ஓயாமல் அலைக்கழிக்க வைக்கிறது. உரிமை என்ற பெயரால், இன்று மனைவியும் இந்தப் பேய்ச் சவாரியில் பிடிவாதமாகச் சேர்ந்துகொண்டு தனது ஆன்ம உடைமையான குணவியல்புகளை இழந்து கோபமாக நிற்கிறாள். நமது சாதனை கட்டிடங்கள்தான்; நமக்கு மரத்தின் மேன்மையும், மலரின் மென்மையும், கொடியின் லாவண்யமும் மறந்துவிட்டது. சாதனங்கள்தான் நமக்கு வாழ்க்கைத் துணை; அவையின்றேல், கோல்கள் பிடுங்கப்பட்ட முடவனாக நாம் பரிதாபமாகக் காட்சியளிக்கிறோம்; வீட்டைக் கூட்ட முதுகு வளைய மறுக்கிறது; சின்னக் கணக்கைக் கூட்ட விரல்கள் வளைய மறந்துவிட்டன. எப்போதும் ஓடினால்தான் நம்மால் சுவாசிக்க முடிகிறது; ஒரு சாயங்காலத்தில், சாவகாசமாக நடந்து, அந்தப் புழுதிச் சாலையின் வளைவிலே பொதிந்து கிடக்கிற ஆச்சரியங்களை நம் கண்கள் பார்ப்பதே இல்லை. மழை, பட்டும் படாமலும் எழும் மண்வாசனையை யார் அனுபவிக்கிறோம் இப்போது? நிலத்திலிருந்து வானம் வரை, எதிலும் நாம் விலையையே பார்க்கிறோம்; எல்லாவற்றையும் வசமாக்கிக்கொள்ள

ஆசைப்படுகிறோம்; எதெல்லாம் நிலையானவையோ, அவற்றையெல்லாம் தொலைத்துவிட்டு நிற்கிறோம். கணவனும், மனைவியும் காலில் செருப்பின்றி, கைவிரல்கள் மெழுகாய் இளகிப் பின்னிக்கொண்டு, மழையில் காதலே கானமாக நடந்து போவதே இல்லை. அவள், சரேலென்று நோட்டுப் புத்தகத்தைக் கிழித்துக் காகிதக் கப்பல் விட்டு, அதில் ஏதோவோர் இனிய ஆசையையும் ஏற்றி, அது விரைந்து தெருமுனையைத் தடையின்றிக் கடக்கும்போது கைதட்டி நட்சத்திரங்கள் இரைத்ததுபோல் சிரிப்பதைக் காணவே முடிவதில்லை. எப்போதும் ஏதோ வேலை மயமாய் இருக்கின்ற கணவனுக்கு அவள் கூந்தலைத் துவட்ட எங்கே நேரமிருக்கப் போகிறது! பெருந்தீனிதான் கொண்டாட்டம் என்றாகிவிட்டது; ஒரு காட்டின் முனையில் சின்னக் குடிலில் தங்கி, எதிரெ தீமூட்டி, அதில் கம்பியில் குத்திய பலாக்கொட்டையைப் போட்டி போட்டுச் சுட்டுத் தின்பதில்லை யாரும்! அதிகாலையில், வனத்தின் விளிம்பில், விந்தையாக ஒளிமினுக்கும் மான்கூட்டத்தின் கண்களை யார் பார்க்கிறார்கள்? ஓடை நீர் பாதத்தில் சிலீரென்க, மனமெலாம் பஞ்சாகும் பரவசம் யாருக்குப் புரிகிறது? குழந்தைகள் கூனர்களாகி விட்டார்கள்; அவர்கள் வெளியேபோய் விளையாடுவதே இல்லை; யாரோ விளையாடுவதை மணிக்கணக்கில் தொலைக்காட்சியில் பார்க்கிறார்கள்; இல்லையேல் எல்லோரையும் எப்போதும் சுட்டுத்தள்ளும் ராட்சசக் கணினி விளையாட்டில் மூழ்கித் தொலைந்து போகிறார்கள்; தாத்தா, குடிக்கத் தண்ணீர் கேட்டால் கூட, ‘வேற வேல இல்ல போ,’ என்று அன்பும், மரியாதையுமின்றிப் பேசும் மனப்பாங்குதான் அவர்கள் பெற்ற நவீன உலகத்து அறிவியற் கல்வி. வாய்ப்புக்களும், வசதிகளும் கணக்கின்றி மண்டிக் கிடக்கும் இந்தக் காலகட்டத்தில், நமது குழந்தைகளின் கல்வியில் ஆழமுமில்லை; அவர்கள் மனதில் உறுதியுமில்லை. அவர்களுக்கு எதிலும் பிடிப்போ, எவரிடத்தும் மரியாதையோ, அறிவுபூர்வமான இலக்கோ இல்லை. அதனால்தான், அவர்கள் சுபாவம் முரடாகி விட்டது. பல்லாங்குழி, தாயக்கட்டம், பரமபதம், கோலாட்டம், கும்மி, அந்தி நேரம் விளக்கேற்றிப் பாடுதல், வடகமிடுதல், தின்பண்டங்கள் செய்தல், வனப்பும், பயனும் மிகுந்த கைவினைப் பொருட்கள் செய்தல், தோட்டத்திலிருந்து கீரை பறித்து உடனே கடைதல் போன்ற எண்ணற்ற இன்பங்கள் வீட்டை விட்டு வெளியேறி விட்டன; அவற்றின் இடத்தை ‘சீரியல் கில்லர்கள்’ ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டன. அழுகையும், ஆத்திரமும், அறியாமையும் பெருகி, வீட்டுப்

பெண்களுக்குப் பலவிதமான உடற்கோளாறுகளும் நேர்ந்து, அவர்களுக்குச் சீக்கிரமே வயதாகி விடுகிறது. மரத்தில் ஊஞ்சல் கட்டிக் கொலுசு கிணுகிணுங்க ஒரு புத்தகத்தை உணவை மறந்து படித்துவிட்டு, அதைப் பரவசமாய்ப் படபடக்கும் கண்களுடன் பகிர்ந்து கொள்ளும் பெண்ணைப் பார்க்கவே முடிவதில்லை.

எல்லாமே மாறிவிட்டது. மாற்றம் என்பது வளர்ச்சியில் தவிர்க்கமுடியாத கூறுதான் என்றாலும், வெறும் மாற்றமே வளர்ச்சியாகிவிடாது. அதுவும், தலைகீழ் மாற்றம்! இந்தியாவில் புகுந்து கொள்ளையடித்து அடிமைப்படுத்தி அரசாண்டவர்களால் பாரத நாட்டுப் பண்பாட்டை அசைக்க முடியவில்லை. அதற்குக் காரணம் குடும்பம், திருமணம் என்பனவற்றில் இந்தியர்களுக்கு இருந்துவரும் பாரம்பரிய மதிப்பு. எனவே, அவர்கள் உடைக்க நினைத்தது குடும்பம் என்னும் அமைப்பை; திருமணம் என்னும் உறவில் இந்தியர்களுக்கு உள்ள மரியாதையை; அவற்றில் இப்போது விரிசலைக் காண்கிறோம். வீட்டில் விரிசல் கண்டால், நாடு பிளவுபடும் என்பதைக் கண்முன்னே காண்கிறோம்.

பொருளைத் தேடிப் பொருளைத் தேடி, வாழ்வின் பொருளை இழந்து நிற்கிறது இன்றைய சமுதாயம். ஒருபுறம் சாதனைப் பட்டியல்; மறுபுறமோ அதை வெட்கக் கேடாக்கும் தொடர்ந்து வளரும் வறுமை. ‘குழப்பத்தில் சிக்கினால், மறுபடி, அரிச்சுவடிக்குத் திரும்பிப்போ!’ என்பார்கள். எனவே, திருமணம் பற்றிய இந்துக்களின் பார்வையை இன்று, மீண்டும் நினைவில் கொள்ளல் அவசியமாகிறது.

பெற்றோர்கள் ஏற்பாடு செய்யும் திருமணம், காதல் திருமணம், இவையிரண்டுமே தொன்றுதொட்டு நிலவிவரும் வழக்கங்கள். பண்டைய நாளில், காதலென்பது, இளமையின் இயல்பாக, ஏன், உரிமையாக ஏற்றுக்கொள்ளப் பட்டது; அன்றைய சமூகத்துக் கலாசாரத்தின் ஓர் அங்கமாகவே கருதவும் பட்டது. பின்னாளில், காதலென்றாலே அநாகரிகமாக, அருவருப்பாகக் கூடக் கருதும் போக்கு தோன்றிவிட்டது. பாரதியார் போன்றோர், “ஆகையினால் மானுடரே காதல் செய்வீர்!” என்று காதலுக்குக் கொடி பிடித்தனர். இப்போது காதல், மீண்டும் பரவலாகி விட்டது. ஆனால், பண்டைய காதலைப் பார்க்கும் போது, இதன் தரம்

சற்று குறைவாகத்தான் தெரிகிறது. அவசரம் என்பது அறிவியற் போக்கின் ஓர் அவசியம் போலும்!! பெற்றோர்கள் பார்த்து முடிப்பதா, காதல் திருமணமா, எது சரி என்ற கேள்விக்கு விடையே கிடையாது. எந்தத் திருமணமும் வெற்றியிலோ, தோல்வியிலோ முடியலாம். அதற்கும், அது நிகழ்ந்த முறைக்கும் தொடர்பில்லை. என் குருநாதர் வேடிக்கையாகக் கூறுவார், "பெற்றோர் ஏற்பாடோ, காதலோ எனக்குத் தெரியாது. நீங்கள் திருமணத்தைக் காதலியுங்கள்!" என்று. என் தந்தையாரோ இன்னும் ஒருபடி மேலே சென்று, "முதலில், பெற்றோர்கள்தான் நிச்சயம் செய்தார்கள். பிறகு, காதலென்றார்கள்; சரியென்றோம். பிறகு, சாதிவிட்டுச் சாதி காதலித்துக் கட்டிக் கொள்வோம் என்றார்கள்; சரியென்றோம். பிறகு, பெண்ணை விட ஆணோ, ஆணை விடப் பெண்ணோ, அதிக வயது வித்தியாசத்தில் திருமணம் செய்துகொள்வோம் என்றார்கள்; அதற்கும் சரியென்றோம். அதன் பிறகு, குறைந்த பட்சம் விவாகரத்தாகிக் குழந்தையுள்ள வேறு தேசத்துப் பெண்ணைக் கட்டிக் கொண்டுவந்து நின்றார்கள்; இதெல்லாம் சகஜம்தானே, உலகமே குடும்பம்தானே என்றோம். இப்போதோ, ஓர் ஆண், ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் போதும்; கடவுளுக்கு நன்றி சொல்லச் சித்தமாயிருக்கிறோம்!" என்றார்!

ஜாதகப் பொருத்தம் பார்க்கின்ற வழக்கம் பற்றியும் கொஞ்சம் தெளிவு பெறுவோம்:

- ஜாதகப் பொருத்தம் என்ன, சோதிடம் பார்ப்பதே மூட நம்பிக்கை என்று ஒரு சாரார் கருதுகிறார்கள். அதுதான் எல்லாம் என்று இன்னொரு சாரார் பிடிவாதமாய் இருக்கிறார்கள். இரண்டுமே சரியில்லை
- சோதிடம் (astrology) என்பது வானியல் (astronomy) விஞ்ஞானத்தின் ஓர் அங்கமே. பரவலான சாத்தியங்களைக் கண்டுகொண்டு, அதன்படிச் சில நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ள இந்த விஞ்ஞானம் இன்றும் உதவும், முறையான வானிலை அறிக்கை போல. ஆனால், மருத்துவம் போன்ற மற்ற துறைகளைப் போலவே இதிலும் தலையாய பிரச்சினைகள் இரண்டுள்ளன. ஒன்று, அடிப்படைத் தகவல்கள் சரியாக இருக்க வேண்டும். இன்னொன்று, சோதிடர் நிபுணராயிருக்க வேண்டும். இப்போது வீட்டுக்கு வீடு 'நிபுணர்கள்' தோன்றி அனைத்தும் அறிந்தவர்

போல் பேசி, படித்தாலும், அறிவற்று அஞ்சி நிற்கும் குடும்பத்தாரைக் குழப்புகிறார்கள்.

- வியாபார அபிவிருத்திக்காக, சொத்தையும் சொத்தையும் முடிச்சுப் போடுவதைக் காட்டிலும், சோதிடம் பார்ப்பது மேல்!
- காதல் திருமணம் என்று முடிவானபிறகு, ஜாதகம் பார்ப்பது மடமை

பெற்றோர் ஏற்பாடோ, காதலோ, **திருமணம் என்பது நிச்சயிக்கப்படுவது**. அதன் வெற்றி, ஜாதகத்திலோ, காதலிலோ இல்லை. வெற்றி என்பது வாசலில் வந்துவிழும் செய்தித்தாளில்லை. அதற்காகக் கணவன், மனைவி இருவருமே பாடுபட வேண்டும். இந்தக் கருத்து வேதத்திலேயே கூடத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

<u>என் குருநாதரின் கருத்துக்கள்:</u>

**"சோதிடம் விஞ்ஞானமே என்றாலும், எதிர்காலம் பற்றிச் சொல்வது ஒரு கலை. ஏராளமாகக் கிடக்கும் ஸ்லோகங்களைப் புரிந்துகொண்டு, தற்காலச் சூழ்நிலைகளுக்கேற்பப் பலன் கூறுவது எளிதல்ல. சோதிடரின் திறனை நாம் எப்படி அளப்பது? சோதிடத்தை ஓரளவே நம்ப வேண்டும். இன்று, ஜாதகங்களை அடிப்படையாகக்கொண்டு, வரன்களை முடிவு செய்கிறார்கள்; திருமண வேளையை நிச்சயிக்கிறார்கள். என் கருத்து என்னவென்றால், சம்பந்தப்பட்ட ஆணையும், பெண்ணையும் நிறையப் பேசவிடுங்கள். பரஸ்பரம் ஒத்துப்போகிறதா என்று அவர்களை முடிவு செய்ய விடுங்கள். இன்றைய சமுதாயத்தில், ஜாதகப் பொருத்தம் பார்ப்பதை விட, மருத்துவப் பரிசோதனை செய்வதே மேல்."**

**"ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே நிபந்தனையற்ற அன்பும், ஒருவருக்காக ஒருவர் தியாகம் செய்யத் தயாராயிருக்கும் மனநிலையும் இருந்தால்தான் அது காதலாகும். சுயநலம் இழையளவு இருந்தால் கூட, அது காதலே அல்ல. பெரும்பாலும், வயதுக் கோளாறும், எதிர்காலத்தைப் பற்றிய பகற்கனவுகளும் திருமணம் வரை சென்றுவிடுகின்றன. பிறகு, வாழ்க்கையின் நிதர்சனத்தைச் சமாளிக்க முடியாமல் பிரிவிலும், விவாகரத்திலும் அவை முடிகின்றன.**

அன்பைத்தான் கருதவேண்டும் என்றால் பெற்றோர்களின் அன்பும், ஆதரவும், கருத்தும் ஏன் கருதப்படுவதில்லையோ!"

"பெற்றோர்கள் நிச்சயிக்கும் திருமணத்தில் பிரச்சினைகளே இல்லை என்று சொல்வதற்கில்லை. சில சமயங்களில் கணவனும், சில சமயங்களில் மனைவியும் துயர்ப்படுவது உண்மைதான். ஆனால், திருமணம் என்பது, ஆயுட்காலம் வரை தொடரும் நிரந்தரமான உறவு என்று அவர்கள் நம்புவார்களேயானால், காலப்போக்கில், அபிப்பிராய பேதங்களைச் சமன்செய்து கொள்ளமுடியும். பெற்றோர்கள், பிரிவை ஆதரித்து ரகளை செய்யாதிருந்து, சின்னச் சின்ன விஷயங்களையெல்லாம் பெரிதுபடுத்தும் மகன் அல்லது மகள் இவர்களது அறியாமையையும், ஆணவத்தையும் ஊக்குவிக்காமல் தக்க அறிவுரை சொல்ல வேண்டும். சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்! ஒரு திருமணத்தின் வெற்றியில், பெற்றோர்களுக்குக் பெரும்பங்கும் பொறுப்பும் இருக்கிறது. திருமணம் என்பது பிடிக்காதபோது கிழித்துப் போட்டுவிடக் கூடிய 'காண்ட்ராக்ட்' இல்லை; சனாதன தர்மத்தின் அடிக்கல்: ஆயிரங்காலத்துப் பயிர். எனவே, சேர்ந்து வாழ வேண்டிய அவசியத்தைப் பெற்றோர்கள் போதிக்க வேண்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் விலகிக்கொள்வதற்கான சம்மதமும், ஏற்பாடும் நமது சாத்திரங்களிலேயே கூட உள்ளன. இன்று அது சட்டத்தில் வந்திருக்கிறது. அதை அதீதமான பாதுகாப்பாகக் கருதவேண்டுமேயொழிய ஒரு சுலபமான வசதியாகக் கொண்டுவிடக் கூடாது. ஆங்கிலத்தில் திருமணத்தை wedlock என்பார்கள். ஒரு திருமணத்தின் வெற்றி, இந்தப் பூட்டின் சாவியைத் தெரிந்தே தொலைத்து விடுவதில்தான் இருக்கிறது!"

"இல்லறம் என்பது என்ன? மகிழ்ச்சியான மணவாழ்க்கை, விருந்தோம்பல், நன்மக்கட் பேறு, தேசத்தொண்டு, சமுதாயப் பணி, இவையே திருமணத்தால் விளையும் நற்பயன்கள்."

"மனித உடம்பில் முதுகுத்தண்டும், தண்டுவடமும் எப்படி முக்கியமோ அப்படித்தான் அப்படித்தான் நம் நாட்டின் தர்மத்திற்குத் திருமணம் என்ற ஏற்பாடு. மணமக்கள், இகம், பரம், இரண்டிலும் தங்கள் கடன்களை முழுமையாக ஆற்ற

**மணவாழ்க்கை உதவுகிறது. இந்த ஏற்பாட்டின் தரமும், தூய்மையும், வாழும் வரை, இந்து சமுதாயம் பிழைத்திருக்கும்; அதன் உயர்ந்த இயல்பும் நீடிக்கும். திருமணம் என்னும் ஏற்பாட்டில் விரிசல் விழுந்தால், நமக்கும், காட்டுமிராண்டிகளுக்கும் வேறுபாடே இருக்காது. இது உரக்கச் சொல்லப்பட வேண்டும். தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு மணமகனுக்கும், மணமகளுக்கும், அவர்களது பெற்றோர்களுக்கும் இந்தச் சேதி உறுதியாகப் போதிக்கப்பட வேண்டும்."**

என்ன தெளிவான சிந்தனை! புறத்தே அறம், அகத்தே ஆன்மீகம், இதுதான் வாழ்வின் நோக்கம்.

நமது திருமணக் கோட்பாட்டின் கூறுகள் வானளாவியவை. அவற்றை இங்கே, இப்போது நினைவுகூர்தல் மிகவும் அவசியமாகிறது:

- திருமணம், 'நீயும் நானும் சமம்' என்கின்ற ஒப்பந்தம் அல்ல. மாற்றமுடியாத ஒருமையின் அருமையைப் போற்றிக் கொண்டாடுதலேயாகும்
- புறவாழ்வில் அறமும், அகவாழ்வில் ஆன்ம விடுதலையுமே வாழ்வின் நோக்கங்கள். அந்த அறத்தைப் பேணவும், அதன்மூலம் பொருள், இன்பம் இவற்றை அனுபவிக்கவும், ஆன்மீக விடுதலையை நாடிச் செல்லவும் திருமணம் இன்றியமையாத இனிய ஏற்பாடாக இருக்கிறது
- 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்பது வள்ளுவர் வாக்கு. பெண்மை என்னும் பெரும் சக்தியைப் போற்றவும், பேணவும், அதன்மூலம் மாசுகள் நீங்கி மேன்மையுறவும் திருமணமே ஒப்பற்ற வாய்ப்பு. "காதல்செயும் மனைவியே சக்தி கண்டீர்! கடவுள் நிலை அவளாலே எய்தல் வேண்டும்!" என்று கர்ச்சிப்பார் பாரதியார்
- இருவரில் ஒருமையை உணராதார் எங்கும் உள்ளது ஒன்றே என்னும் ஆன்ம உண்மையை எங்ஙனம் உணரமுடியும்!
- 'செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும்' பெரும்பேறு இல்லறத்தார்க்கேயன்றோ! 'அறத்தால் வருவதே இன்பம்மற் றெல்லாம்

புறத்த புகழும் இல,' என்று தெய்வப் புலவர் தீர்மானமாகச் சொல்கிறார். இல்லறம் இன்றேல் வாழ்வில் அறம் இல்லாது போய்விடுகிறது

- காதலிலிருந்து கடவுள் வரை, கானத்திலிருந்து மௌனம் வரை, ஆட்டத்திலிருந்து அமைதி வரை, புறத்தில் நம்மை அறத்தில் நடத்தி அகத்திற்குக் கரம்பற்றி அழைத்துச் செல்லவே, கருத்தொருமித்த அவனும், அவளும் கரம்பற்றி வேள்விக் கனலை வளைய வருகின்றனர்

மிகச் சுருக்கமாகச் சொல்வதானால், இல்லறமே நல்லறம்.

வேதத்தில் மணப்பெண்ணைப் பற்றிய பார்வை எப்படி இருந்தது என்பதைக் காண்போம். வேதத்திலும், ஸ்மிருதிகளிலும் பெண்ணைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ள சில சேதிகளைக் கண்ணுற்றால், வியப்பாகவும், பெருமிதமாகவும் இருக்கிறது. அன்றைய பார்வை பரந்ததாகவும், அன்றைய சமுதாயம் நம்மைக் காட்டிலும் மிகுந்த பண்பாடு மிக்கதாகவுமே காணப்படுகிறது. இதோ, சில உதாரணங்கள்:

- கணவனின் ஒரே நண்பர், மனைவிதான்
- மனைவி, தான் கணவனை விடவும் உயர்ந்தவள் என்று கருதுவதில்லை. கணவன், மனைவியைத் தன்னைவிடத் தாழ்ந்தவளாக நடத்துவதில்லை
- கணவனின் பிழையைத் திருத்துவது மனைவியின் கடமை
- பெண்கள், ஆண்களைக் காட்டிலும் அறிவு மிகுந்தவர்கள். அவளுடைய புத்தி அவனதைக் காட்டிலும் மேன்மையானது
- பெண், ஒரு கர்மயோகி. அவள், கடமைகளைக் கடமையின் பொருட்டே செய்கிறாள். குடும்ப நலனுக்காகத் தன்னலத்தைத் தியாகம் செய்கிறாள்
- பெண்ணே மனித வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றுகிறாள். அவள் தேவியின் அம்சம்
- பெண், ஒரு பெரும் பாறையைப் போல. வீடே அவளைச் சார்ந்துதான் இருக்கிறது. அவளது கண்ணியமே எல்லா மங்கலங்களுக்கும் காரணம். அதுவே, பகையை வீழ்த்தும் படை

ஒரு முக்கியமான சேதி. திருமணச் சடங்குகளில் ஓதப்படும் மந்திரங்களை இயற்றியது வேதகாலப் பெண்முனிகளே! ரிஷிகளின் மனைவியர் ரிஷிகா எனப்பட்டனர். அவர்களது நோக்கும், வாக்கும்தான் எத்தனை மகத்தானவை பாருங்கள்:

**"பூமியைச் சத்தியம் தாங்குகிறது. வான், கதிரொளியால் துலங்குகிறது. அண்டத்தின் தளங்களை, நிரந்தரமான நியதிகள் ஏந்துகின்றன. மேலுலகத்தில், தெய்வீக நேயமே ஆட்சி புரிகிறது."**

மகிழ்ச்சியான திருமண வாழ்க்கைக்கு ஆதாரம் எது? பண்டைய நூலிலேயே இதற்கு விடை தெளிவாக இருக்கிறது:

**"மிகவும் முதன்மையான தேவை, முதிர்ந்த நேயம்; காதல் போதாது! இடைவிடாத கவனமும், தன்னலம் கருதாத தன்மையும் தேவைப்படுகின்றன. திருமண வாழ்க்கை வெற்றிகரமாய் விளங்கவேண்டும் என்பதற்காக எந்தக் கணவனும், மனைவியும் சேர்ந்து செயற்படுகிறார்களோ, அவர்களது வாழ்க்கை வெற்றிகரமாகவே அமையும்."**

இந்த அற்புதமான வாக்கியத்தை இப்படிப் புரிந்து கொள்ளலாம்:

- முதலில், **ஒருவரையொருவர் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.** இவன் கணவன், இவள் மனைவி என்ற அடையாளங்களுக்கு அப்பால், ஒரு மனிதப் பிறவி, இன்னொரு மனிதப் பிறவிக்கு உரிய மரியாதையை இருவருமே ஒருவருக்கொருவர் கொடுக்க வேண்டும்
- இரண்டாவது, கணவன் மனைவியை, மனைவி கணவனை, எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், **அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும்.** (மேற்சொன்ன பரஸ்பர மதிப்பின் வெளிப்பாடாகவே இது அமையும்)
- மூன்றாவது, **ஒருவரிடமிருந்து இன்னொருவர் கவனித்துக் கற்பதில் ஆர்வம் காட்டவேண்டும்.** வாழ்க்கையில், அழகுக்கும், சுவாரசியத்திற்கும் காரணம், ஒன்றுபோல் இன்னொன்று இல்லாததே. உலகெங்கும் ஒரேமலரினமே

இருந்தால் சகிக்க முடியுமா? மல்லிகை இருப்பதால்தான், ரோஜாவும் அழகாகத் தெரிகிறது. எனவே, கணவனும், மனைவியும் வெவ்வேறு அறிவு நிலை, திறமைகள், ரசனைகள் கொண்டவர்களாக இருப்பதே, அவர்கள் இணைந்து வாழ ஏதுவாகிறது! 'புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்,' என்பார் வள்ளுவர். புறத்தே அறம், அகத்தே ஆன்மீகம் என்ற கொள்கையில் அவர்கள் ஒன்று பட்டிருந்தால் போதும்.

- நான்காவது, **மாறி மாறி ஈடு செய்வதே மணவாழ்க்கை.** இதை, இருவிதங்களில் புரிந்து கொள்ளலாம். ஒன்று, இருவரில் ஒருவருக்கு மனத்தொய்வு நேரும்போது அடுத்தவர் தெம்பு தந்து உற்சாகமூட்டுவது. இன்னொன்று, இருவரிடமும் அன்பும், நற்குணங்களும் இருந்தாலும், இருவருக்கும் தனித்துவம் வாய்ந்த சில சிறப்பான திறமைகள் போன்ற அம்சங்கள் இருக்கலாம். இருவர், சேர்ந்து வாழும்போது, அவை இருவருக்கும் சொந்தமாகின்றன! ஜியோமிதியில் சொல்லப்படும் மிகை நிரப்புதல் இதுதானோ!
- இந்த உறுதியான தளத்தில் மலர்ந்து வளர்வதுதான் அன்பு. ஒருவரில் ஒருவர் நிரம்பித் ததும்புவதே காதல். ஒருவரை ஒருவர் அன்பில் மிஞ்சுவதே நேசம். ஒருவருக்கொருவர் உரிமை எடுத்துக் கொள்வதே நட்பு. ஒருவருக்காக இன்னொருவர் விட்டுக் கொடுப்பதே மாண்பு. இறுதிவரை தொடரும் இந்த விளக்கங்கள் தேவைப்படாத சினேகத்துக்காக எதையும் செய்ய, இழக்கத் தயாராயிருப்பதே தியாகம்.

சரி, பிணக்குகளே வராதா? யார் சொன்னது! நிறைய வரும்! அவற்றை ஆளத் தெரிந்தால் அவையே தாம்பத்தியம் என்னும் பூங்கொடிக்கு உரமாகும்! ஊடல், உணர்ச்சிகளின் தளத்தில் விளைவது. அங்கே. புத்தி, தர்க்கம் இவற்றைப் புகுத்திக் குட்டையைக் குழப்பக் கூடாது. அபிப்பிராய பேதங்களே பிணக்குகளாகிப் பூசல் வரை போகக் கூடும். **ஒருவரையொருவர் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்** என்ற முதற்பாடத்தை எப்போதும் நினைவில் கொண்டால் இவற்றைப் பக்குவமாகச் சமாளிக்கலாம். உண்மையை அறிவதற்காக, சமமானவரோடு கலந்து உரையாடுவது விவாதம். தான் ஏற்கனவே மனதில் வரித்துக் கொண்ட ஒரு

கருத்துக்குக்காகக் கச்சை கட்டிக்கொண்டு பேசுவது வாதம். ‘என் கருத்தே சரி, உன் கருத்து முழுதும் பிழை,’ என்று எடுத்த எடுப்பிலேயே அதிரடியாய்த் துவங்குவது பிடிவாதம். இவை, நினைவிருந்தால் போதும்.

சில பிணக்குகள் மாலைக்குள் தீர்க்கப்பட வேண்டும். அவை ராத்திரியைத் தாண்ட அனுமதிக்கக் கூடாது. பள்ளியறையில் ஒருபோதும் இறுக்கமான மௌனம் கப்பிக்கிடக்கக் கூடாது. சிலவற்றைப் பேசித்தான் தீர்க்க வேண்டும். சில, பேசாமல் இருந்தால்தான் தீரும். விட்டுப் பிடித்தல், விட்டுக் கொடுத்தல் இவையிரண்டுமே முக்கியமானவை.

சரி, நமது திருமணச் சடங்குகள், அப்போது ஓதப்படும் மந்திரங்களின் உட்பொருளைச் சற்றே காண்போமா? அவற்றின் மூலம், ரிக் வேதமே. அவை பொருள் பொதிந்த சொற்களைத் தாங்கி வருகின்றன என்றாலும் அவை வெறும் சொற்களல்ல. சக்தி வாய்ந்த, சரியாக உச்சரித்தால் நற்பலன் வழங்கும்படியான ஒலிவடிவில் அமைக்கப்பட்டுள்ளன. சடங்குகள் விரிவானவை, ஆழமான அர்த்தமுள்ளவை. ஒரு சிறிதேனும் அவற்றை உணர்ந்து கொள்ளுதல் பயன் தரும். திருமணம் ஒரு வேடிக்கையோ, கேளிக்கையோ அல்ல என்பது அவற்றின் மேம்போக்கான பொருளிலேயே புரிந்துவிடும்:

## <u>கணபதி பூஜை</u>

‘கண’ என்றால் ‘குழு’ என்றும் ‘பதி’ என்றால் ‘தலைவன்’ என்றும் பொருள் கொள்ளலாம். அண்ட சராசரங்களிலிருந்து, மனித உடம்பு வரை எல்லாம் குழுக்களின் பொலிவே! கோள்கள், விண்மீன்கள், பருவங்கள், காலமென்னும் கதையில் நேரங்கள் என்னும் அத்தியாயங்கள், உடம்பின் அவயவங்கள், ஏன் அணு கூடக் குழுக்களின் தொகுப்பாகவே இருக்கிறது. இந்தத் தொகுப்பில் ஒழுங்கிருக்கும் வரை, வடிவங்கள் சீராக இருக்கின்றன. அதில் கோளாறு நேரும் போது, அவை சீர் குலைகின்றன. இப்படிப்பட்ட குழுக்களின் தலைவன் என்றே நாம் கணபதியைப் போற்றுகின்றோம். அவரே, நமது உடலில் நிர்மாணத்திற்கும், அது இயங்கும் இயக்கத்தின் ஒழுக்கத்திற்கும் பொறுப்பு. உடம்போடு நம் உணர்வு

பொருந்தியிருக்கக் காரணமான அவரே, நாம் உடலல்ல என்பதை உணரத் தலைப்படும் யோகத்திற்கும் அதிபதியாகிறார். மேலும், அவரை விக்னேஸ்வரர் என்றும் வழிபடுகிறோம். அதற்கு, தடைகளைக் களைபவர் என்பது மட்டும் பொருளன்று. சரியான தடைகளை ஏற்படுத்தி நம்மைக் காப்பவர் என்றும் பொருள். விபத்துக்குள்ளாகப் போகும் ரயிலை நாம் தாமதமாகக் கிளம்பித் தவற விடுவதுபோல்!

எனவே, முதல்வரான கணபதியை முதலில் வணங்குவதே சடங்குகளின் துவக்கமாகிறது.

<u>நவக்கிரக பூஜை</u>

ஒன்பது கோள்களின் சுழற்சி நம் வாழ்க்கையைப் பாதிக்கிறது. அது, நம் வினைக்கேற்ப நம்மைப் பலனை அனுபவிக்கச் செய்யும் எந்திர கதி ஏற்பாடே! நாம், கோள்களைத் துதிப்பதில்லை. அவற்றுக்கு அதிபதியான கடவுளரைத் தொழுகிறோம். இது, தவறுக்கு வருந்தும் தத்துவமேயாகும். வினைகளின் பயனை விரட்டிவிட முடியாது. பிரார்த்தனைகளின் மூலம், நமது தாங்கும் சக்தி அதிகரித்து, வினையின் தாக்கம் குறைகிறது.

<u>விரதம்</u>

பிரும்மச்சாரி தான் இல்லறத்தானாகச் சம்மதித்து அதில் நுழையும் தருணத்தைக் குறிக்கும் வகையில், அவன் மணிக்கட்டில் காப்புக் கட்டப்படுகிறது. மணமகளுக்கும் அவ்விதமே. இருவருக்கும் அறிவுரைகள் சொல்லப் படுகின்றன. இருவருமே சேர்ந்து அக்கினியின் முன்னிலையில் கடவுளைத் தொழுவார்கள்.

<u>காசி யாத்திரை</u>

'வருண' மற்றும் 'அசி' என்னும் இரு நதிகளுக்கிடையேயுள்ள வாரணாசி என்று அழைக்கப்படும் காசி உலகிலேயே என்றும் உயிர்ப்போடு விளங்கிவரும் மிகப்

பழமையான நகரம். பாரத நாட்டில், அது எப்போதும் கல்விக்குத் தலைநகரமாகவே விளங்கி வந்தது. ஆன்மீகமே இன்று இந்துமதம் என்றழைக்கப்படும் சனாதன தர்மத்தின் நோக்கம் என்பதால், காசியே இந்துக்களின் தலைநகரம். அன்னாளில், ஒவ்வோர் ஆண்மகனும் 14 வருடங்கள் குருகுலக் கல்வி பயின்று, கடுமையான பிரும்மச்சரிய விரதம் கடைப்பிடித்து வருவதுண்டு. பின்பு, பலரும் மேற்படிப்புக்காகவும், அதன் பிறகு ஆத்ம சாதனையில் ஈடுபடவும் காசிக்குச் செல்வதை லட்சியமாகக் கொண்டிருந்தனர். அப்போது, பெண்ணின் தந்தை, வழியில் அந்தக் கனல் பொருந்திய காளையைச் சந்தித்து, இல்லற வாழ்வின் மேன்மையைப் பற்றி எடுத்துச் சொல்லி, அதிலிருந்து கொண்டே ஆத்ம சாதனை பயில முடியும் என்பதற்குச் சான்றுகளைச் சுட்டிக்காட்டித் தன் பெண்ணை அவனுக்குத் திருமணம் செய்து தருவதாக வார்த்தை மொழிவதுண்டு.

இன்று அப்படி எவனும் கல்யாணம் வேண்டாம் என்று காசிக்கு ஓடச் சித்தமாக இல்லை என்றாலும், முந்தைய வழக்கம் இன்று சடங்காகத் தொடர்கிறது, திருமணம் நிச்சயமான பின்பு!

## மாலை மாற்றல்

யாருக்கும் தெரியாமல் திருமணம் செய்து கொண்டாலும், ஆணும் பெண்ணும் மாலை மாற்றிக் கொள்ளும் வழக்கம் தொன்றுதொட்டு இன்றுவரை நிலவுகின்றது. காதலில், மனம் பூரிக்கின்றது; இதயமொட்டு முகையவிழ்க்கின்றது; நினைவுகளிலெல்லாமும் நறுமணமே கமழ்கின்றது. மலர், காதலின் சின்னம். மங்கலத்தின் சான்று. இருவர் ஒருவரல்ல, ஒன்றே இரண்டிலும் என்னும் உயிர் நேசத்தைக் கொண்டாட மணமக்கள் மாலை மாற்றிக் கொள்கின்றனர்.

## ஊஞ்சலாடுதல்

அந்தரத்தில் அசைந்து கொண்டே இருக்கிறது ஊஞ்சல். அது வாழ்வின் ஓயாத அசைவை, ஏற்ற இறக்கங்களைக் குறிக்கிறது. அதிலே, பதறாமல்

அமர்ந்திருக்கின்றனர் மணமக்கள்; அது உறுதியைக் குறிக்கிறது. அவர்கள் கரங்கள் ஒன்றிலொன்றாயிருக்கின்றன; அது ஒற்றுமையைக் குறிக்கின்றது. ஒன்றாய் இருந்தால், உறுதியோடு வாழ்ந்தால், வாழ்வின் மாற்றங்களால் நிலைகுலையாமல், அதை உல்லாசமாக்க முடியும் என்பதைத்தான் இந்த ஊஞ்சலாடுதல் குறிக்கிறது.

மஞ்சள் கலந்த அரிசி தூவப்படுகிறது. பெண்கள் சுற்றி நின்று பாடுவார்கள். அழகாய்க் கொலு வீற்றிருக்கும் தம்பதியர் கண்ணேறுக்கு ஆளாகக் கூடாதென்று சுற்றிப் போடுவார்கள்.

<u>நவதானியம் (பாலிகை)</u>

ஒன்பது விதமான தானியங்களை நனைத்துச் சிறிய மண்சட்டிகளில் விதைத்து வைப்பார்கள். இது, மகப்பேறு, மற்றும் செல்வம், செழிப்பு இவற்றுக்கான பிரார்த்தனையே. திருமணத்திற்கு மறுநாள் அதைக் கரைத்து நதியிலோ, ஏரி போன்ற நீர் நிலையிலோ சேர்த்து விடுவார்கள்.

<u>புத்தாடை</u>

இன்று புதுப்புடவை! அவள், வாழ்வின் புதிய நிலைவாயில் ஒன்றில் நுழைகிறாள். புத்தாடை தரித்து நிற்கிறாள். பரவசமான ரிஷியின் மனைவியின் மந்திரம் சொல்கிறது : **"அதோ! அக்கினியை விடத் தூய்மையாக அதன் முன் ஜ்வாலை போலே நிற்கிறாள் அவள்! நல்ல மனமும், நலமான உடம்பும் அவள் முன்பே பெற்ற வரங்கள்! இன்று, இனிய கணவனுடன் பல்லாண்டு வாழ்க்கை, ஆயுளும், கீர்த்தியும் மிக்க மக்கட் செல்வங்கள் அனைத்தையும் வரங்களாகப் பெறுகிறாள்! அவனோடு தான் வாழப்போகும் உறுதியே ஒளியாக அவனருகே திகழ்கிறாள்"**

<u>கன்யாதானம்</u>

தானத்தில், கொடுப்பவன் கை உயர்ந்தே இருக்கிறது. இங்கே, கொடுக்கப்படும் பொருள் விலைமதிப்பற்றது என்பதனால் இந்த தானத்தின் சிறப்பு இன்னும் மிகுதியாய்த் தெரிகிறது. தனக்குச் சொந்தமான, தனக்கு உரிய பொருள் என்று எதுவுமே இல்லை. ஆனால், தன்னுடன் இருக்கும் ஒன்றை, இன்னொரு வீட்டை அலங்கரிக்கவே தனக்குப் பிறந்தவொன்றை, உரியவனுக்கு ஒப்படைப்பதாக, முழுதுமாகவும், மனமுவந்தும், வேறு சில சிறப்புக்களோடும் ஊர் சாட்சியாக, அண்டத்தின் எல்லாத் தளங்களுக்கும் போய்வரக்கூடிய தூதனான தூய அக்கினியின் முன்னிலையில் வழங்கப் படுவதால் இது கன்யாதானம் என்று போற்றப்படுகிறது. (ஆதி சங்கரரின் *கோடி கன்யா மஹா தானம்* என்ற வாக்கியத்தைச் சற்றே நினைவு கூர்ந்தால் இதன் மகத்துவம் விளங்கும்)

பெண்ணின் தந்தை, மாப்பிள்ளையிடம் சொல்கிறார்: **“இதோ! என் மகளை உமக்கு வழங்குகிறேன்! அவள் எல்லாக் குணநலன்களூம் பொருந்தியவள்; இனிய இயல்புடையவள்; அறிவில் தெளிவுடையவள்; அணிகலன்கள் பூண்டு நிற்கிறாள். உமது அறம், செல்வம், உமது அன்புக்கும் அவள் காவலாக இருப்பாள்!”** என்ன பெருமை! என்ன நேசம்!

மாப்பிள்ளை, மணப்பெண்ணை ஏற்றுக்கொண்டு **மூன்றுமுறை உறுதி மொழிகிறார்: “இன்பத்திலும், துன்பத்திலும், இப்பிறப்பிலும், இதற்கப்பாலும், என்றென்றும் நான் இவளது துணைவனாக இருப்பேன்!”**

**<u>கைத்தலம் பற்றல்</u>**

‘கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி,’ என்பார் கோதைப் பிராட்டி. மணமகளின் மொட்டுக்கரத்தைத் தனது கரத்துக்குள் எடுத்துக்கொண்டு, மணமகன் சொல்கிறான் : **“நீ எனக்குக் கடவுளர்கள் வழங்கிய செல்வம். முதுமையிலும் நாம் பிரியாமல் நீடு வாழ்வோமாக.”** இருவரும் அக்கினியை வலம் வருகிறார்கள். நெருப்பல்ல அக்கினி; நெருப்பு என்னும் பூதத்தின் தேவன். அண்டத்தில் உள்ள எல்லா உலகங்களுக்கும் சென்று வரக்கூடியவன்; சேதி சொல்லக் கூடியவன் அக்கினி. அவனே சர்வ சாட்சி.

## மங்கல நாண்

தாலி பெண்ணுக்கு வேலி என்றெல்லாம் சொற்றொடர்கள் புழங்குகின்றன. உண்மையில், அது ஆணுக்குத்தான் வேலி. 'கற்புநிலை பற்றிப் பேசவந்தால், இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்,' என்கிறார் பாரதியார். அவள் கழுத்தில் அணிவது, அவன் கண்ணில் படத்தான்! ஊராரும் அறியத்தான். அவளுக்கு வேலி தேவையில்லை. ஏனெனில், "செம்மை மாதர் திறம்புவதில்லையாம்." அவள் கழுத்தில் மங்கல நாணை அணிவித்து அவன் ஒரு முடிச்சுப் போட, அவனது சகோதரியர் இன்னும் இருமுடிச்சுப் போட்டு அவள் தங்கள் வீட்டுக்குள் நுழைந்ததைக் கொண்டாடுகிறார்கள்.

மங்கல நாணை அணிவித்தபடி மாப்பிள்ளை சொல்கிறார் : **"உன்னோடு நான் நீடு வாழ இறையைத் துதிக்கிறேன். இந்த மங்கல நாணை உன் அழகிய கழுத்தில் அணிவிக்கிறேன். எல்லாப் பேறுகளும் பெற்று, நீ நூறாண்டு நிறைவான வாழ்க்கை வாழ இறை அருள்வதாக!"**

## ஏழு அடிகள்

மணமகளின் பாதம் பற்றி, மெட்டி அணிவித்து ஏழடிகள் அவள் எடுத்துவைக்க உதவுகிறான் மணமகன். வண்ணங்கள், மேலுலகங்கள், கீழுலகங்கள், ஸ்வரங்கள், யோகச் சக்கரங்கள் போன்ற பலவும் படைப்பில் ஏழேழாகத்தான் உள்ளன. அவள் அடியெடுத்து வைக்கும்போது அவன் சொல்லும் வார்த்தைகளைக் கவனியுங்கள்:
**"ஓரடி எடுத்து வைத்ததுமே என் துணைவியாகி விட்டாய்! இதன்மூலம், உன் நட்பைப் பெற்றேன். நாம் இணைபிரியாமல் வாழ்வோமாக! நாம் ஓர் உறுதி மொழிவோம். நாம் நேசத்தில் வாழ்வோம்; ஒரே உணவை, ரசனைகளை, வலிமைகளைப் பகிர்ந்து கொள்வோம்! ஒரே மனமுடையவர்களாக வாழ்வோம்! விரதங்களைச் சேர்ந்தே கடைப்பிடிப்போம்! நான் கானம்; நீ கவிதை! நான் வானம்; நீ பூமி! நான் உயிரின் விசை; நீ அதன் பாத்திரம். சேர்ந்து வாழ்வோம்!**

**மக்கட் செல்வத்தோடு வேறு செல்வங்களையும் பெறுவோம்! இனிய வார்த்தைகள் பேசும் பெண்ணே! வா!"**

மந்திரமா, கவிதையா இது! 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளியுண்டாம்,' என்ற பாரதியின் வார்த்தைதான் நினைவுக்கு வருகிறது. உண்மையான கவிதை, மந்திரமே! 'மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின்பம்!' என்பானே அது இதுதானே!

<u>அருந்ததி பார்த்தல்</u>

வானிலே, சப்தரிஷி மண்டலத்தைத் தினமும் பார்க்கலாம். ரிஷிகள், இன்னும் தபோலோகத்தில் இருக்கிறார்கள். அவர்களை இந்தப் புவியில் ஒருவன் நினைக்கும் மட்டும் அவர்கள், தங்கள் அடையாளத்தோடே இருந்து அருள்புரிவார்கள். அவர்கள் வழி வந்தவர்கள்தான் நாம் அனைவரும். ரிஷிகளுக்குச் சாதி, சமயம் கிடையாது. ஞானமும், நேயமும், தவமும்தான் உண்டு. மணமக்கள், அவர்களது ஆசி பெறுவது சாலச் சிறந்த சடங்கு.

வசிட்டரின் மனைவியான அருந்ததி பெண்மையின் செம்மைக்குச் சின்னமாய், அண்ட வெளியில் தாரகையாய் மின்னுகிறார். அந்த அன்னையின் அருள் பெற்றால் துயரங்கள் விலகி மனம் தூய்மையுறும்.

இதன் பிறகு, மணமக்கள், துருவ நட்சத்திரத்தைப் பார்க்கிறார்கள். அது, வடக்கிலுள்ள மேலுலகங்களுக்கு நிலைவாயில். நாம் அனைவரும், இறுதியில் அதை எய்தவேண்டும் என்பதே உயிர் வாழ்க்கையின் நோக்கம். இல்லறம் அதற்கான ஏற்பாடு. துருவனைப் பார்த்துச் சொல்லப்படும் மந்திரம் இது: **"ஓ! துருவனே! உறுதியான இடத்தில் வசிக்கிறாய் நீ! உறுதியாக இருக்கிறாய்! நீ உறுதியின் ஊற்று! வாழ்வில், உயிரின் உறுதிக்கு நீயே பொறுப்பு! நட்சத்திர மண்டலங்களின் அச்சாணி நீ! உறுதியைத் தாக்கும் எதிரிகளிடமிருந்து எம்மைக் காப்பாற்று!"**

## லாஜா ஹோமம்

இது, இறுதியில் மணமகள் செய்யும் வேள்வி. கணவனின் நீண்ட ஆயுளுக்காகச் செய்யப்படும் பிரார்த்தனை இது. இதில், அவளது சகோதரனும் கலந்து கொள்கிறான்.

## பெரியோர் ஆசிகள்

சுற்றி நின்று ஆசி வழங்கும் பெரியோர்கள் சொல்லும் வார்த்தைகள் வேதத்திலும், வேறு நூல்களிலும் மந்திரங்களாக வெளிப்பட்டிருக்கின்றன. அவற்றில் சிலவற்றையேனும் இங்கு கண்டு மகிழலாம்:

*"தமது நலனில் அக்கறையுள்ள தந்தை, தாய், சகோதரன், சகோதரி இவர்கள் யாவரும் பெண்ணைக் கௌரவிக்கவும், பேணவும் கடமைப் பட்டவர்கள். எங்கே பெண்கள் கௌரவிக்கப் படுகிறார்களோ, அங்கே கடவுளர்கள் மகிழ்கிறார்கள். எங்கே பெண்களுக்கு மரியாதை இல்லையோ, அங்கே புனித வேள்விகளும் பயன்தருவதில்லை."*

*"மணமகளே! உன் கணவனின் தந்தையிடமும், தாயிடமும், சகோதர சகோதரியரிடமும், நீ ராணியாகத் திகழ்வாயாக!"*

*"மணமகளே! என்றும் பேச்சில் அதிகாரம் உன்னுடையதாகவே இருக்கட்டும்!"*

*"தம்பதியரே! பணிவோடிருமின்! இன்சொல் பேசுமின்! முறைமையுடன் திட்டங்கள் செய்குமின்! சேர்ந்தே இருமின்! ஒரே மனத்தோடிருமின்! ஒற்றுமையாயிருமின்!"*

*"இந்த வீட்டில் வசியுங்கள்! சற்றும் பிரியாதீர்கள்! குழந்தைகள், பேரக் குழந்தைகள் எல்லாம் பெற்று, குதூகலத்தோடு வாழுங்கள்! உங்களுக்கு வழங்கப்பட்ட காலமெல்லாம், இறுதிவரை உங்கள் நெஞ்சமெல்லாம் நிரம்ப இனிதே அனுபவியுங்கள்!"*

*“இந்திரனே! இந்தப் பெண்ணுக்கு அற்புதமான குழந்தைகளையும், செல்வத்தையும் வழங்குவாயாக! இவளுக்குப் பத்துப் புதல்வர்களைக் கொடு! இவளது கணவனைப் பதினொன்றாம் குழந்தையாக்கிவிடு!”*

*“உனது கணவனின் இந்தப் புதிய குடும்பத்தில், நீ மகிழ்ச்சியாகவும், வளமாகவும், உன் குழந்தைகளோடு வாழ்க! இந்த வீட்டின் கடமைகளில் கவனமாக இரு! உன் கணவனோடு பிணைந்திரு! நீங்கள் இருவரும் இல்லறத்தின் நியதிகளுக்கேற்பச் சேர்ந்து பல்லாண்டு வாழ்க!”*

*“இந்தப் பெண் கொடுத்து வைத்தவள்தான்! அனைவரும் வாருங்கள்! எழிலார்ந்து நிற்கும் இவளைக் காணுங்கள்! ஆசீர்வதியுங்கள்! நல்வாழ்த்துக்களைக் கூறுங்கள்! பிறகே வீடு திரும்புங்கள்!”*

இறுதியாக, கணவனும், மனைவியும், பெரியோர்களுக்கு நன்றி சொல்லி, அவர்களைப் பணிகிறார்கள். அப்போது அவர்கள் இணைந்து பேசும் வார்த்தைகளை ரிக் வேதம் மந்திரமாக்கித் தந்திருக்கிறது:

**“இங்கு கூடியிருக்கும் விருந்தினர் அனைவரும் எங்கள் இதயங்களை இணைத்து வைப்பீர்களாக! கலந்து விட்ட நீர் போல நாங்கள் ஒன்றுபட்டும், அமைதியாகவும் வாழ்வோமாக! சுவாசங்கள் போலே நாங்கள் சேர்ந்திருப்போமாக! படைத்தவனும் அவனது படைப்பும் போல நாங்கள் கலந்தே இருப்போமாக! ஆசானும் சீடனும் போல நாங்கள் ஒன்றாகவே நிலவுவோமாக! நாங்கள் ஒருவர் மீதொருவர் காதலோடு இருப்போமாக!”**

இன்னும் எத்தனையெத்தனையோ அற்புதமான கருத்துக்கள், நல்வாழ்வு, நலன் விழைதல், நாகரீகம், அறன்வலியுறுத்தல், அறிவுரை சொல்லல் போன்ற இல்வாழ்க்கைக்குத் தேவையான எத்தனையோ சேதிகள் வேதங்களிலும், வேறு பழ நூல்களிலும் மண்டிக் கிடக்கின்றன. இன்னும் திருக்குறளை எடுத்துக் கொண்டோமானால், இல்வாழ்வைப் பற்றி மிக உயர்வாகவும், கச்சிதமாகவும்,

செறிவாகவும் நினைக்க நினைக்கக் 'கற்றனைத்தூறும்' கருத்துக்கள் கொட்டிக் கிடக்கின்றன. அனைத்தையும் இங்கே எழுதவோ, விளக்கவோ இயலாது.

திருமணம் என்பது ஓர் ஆணும், ஒரு பெண்ணும் இணைவது மட்டுமன்று; இரு குடும்பங்கள் சங்கமிக்கும் இனிய வைபவம். அறத்தைப் பயிலவும், பேணவும் அரிய வாய்ப்பு. அன்பு பூண்டு அகம் துலங்க இறைவன் தந்த வரம். ஆன்மீக விடுதலைக்கு நுழைவாயில்.

நமது கதை சரித்திரப் புத்தகங்களில் இல்லை; அது மிகப் பழமையானது; அதன் விவரங்கள் புராணங்களில் இருக்கின்றன. அவற்றைத் திறந்த மனத்தோடும், பொறுமையோடும் அணுகினால், நமது முன்னோர்கள் குகையில் வசித்த நாகரிகமற்ற மனிதர்களல்ல, மேலுலகங்களோடு தொடர்பு கொண்டு தாம் தவத்தில் தெளிந்த விஞ்ஞான, மெய்ஞான உண்மைகளை மறையாகப் பாடிவைத்த மாமுனிகள் என்பது தெரியவரும். முக்தியே மனித வாழ்வின் இலக்கு என்பது அவர்களின் கண்டுபிடிப்பே. இதற்காகவே ஆன்மாக்கள் மனித உடல் பூணுகின்றன. இந்த வாய்ப்பு பெருக சந்ததி தேவை. அது நாகரிகமாகவும்,, அறவழியாகவும் நடக்க வேண்டும். இதுவே திருமணத்தின் அறுதி நோக்கம்.

வாழ்க திருமணம்! வளர்க பண்பாடு! 'வாழிய பாரத மணித்திரு நாடு!'